பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 31 செவ்வாய்க்கிழமை 14.06.2022 கதிர் 221

### இனி இது ரகசியம் அல்ல!

இப்போது எந்தத் தேர்தல் நடந்தாலும் அது தேசிய மட்டத்தில் தான் நடத்தப்பட வேண்டியிருக்கும். உள்ளூராட்சித் தேர்தல் என்றாலும், நாடு முழுவதிலும் இருக்கும் அனைத்து 345 உள்ளூராட்சி சபைகளுக்கும்தான் ஒன்றாக நடத்தப்பட ☞2

## திருக்கேதீஸ்வரக் கும்பாபிஷேகத்தை ஒட்டி

# பலாலிக்கு மீள விமான சேவை காங்கேசன்துறைக்குப் படகு!

### அமைச்சரவை அங்கீகாரம்; டக்ளஸின் முயற்சிக்கு வெற்றி
### நேரில் வந்து ஏற்பாடுகளை அமைச்சர் நிமால் கவனிப்பார்

கொழும்பு, ஜூன் 14

அடுத்த மாத முற்பகுதியில் திருக்கேதீஸ்வரம் கும்பாபிஷேகம் நடைபெறுவதையொட்டி தமிழக பக்தர்கள் கும்பாபிஷேகத்துக்குப் பெரும் திரளாக வந்து செல்வதற்கு வசதியாக தமிழகத்துக்கும் பலாலிக்கும் இடையில் மீண்டும் சர்வதேச விமான சேவையை நடத்துவதற்கும், தூத்துக்குடிக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் படகுச் சேவையை ஆரம்பிப்பதற்கும் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கை அளவில் இணக்கமும் அங்கீகாரமும் தெரிவிக்கப்பட்டன. இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்த தீவிர முயற்சிகளுக்கு பச்சைக்கொடி காட்டபட்டிருப்பதாக அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன. ☞2

## தியத்தலாவையில் பனிக்கட்டி மழை

நாட்டில் பெய்த கனமழை காரணமாக பனிக்கட்டிகள் விழுந்த சம்பவங்கள் இதற்கு முன்னரும் பல தடவைகள் பதிவாகியுள்ளன.

அவ்வாறான மற்றுமொரு சம்பவம் நேற்று பண்டாரவளை தியத்தலாவ பிரதேசத்தில் ☞9

## கிண்ணியாவில் திமிங்கிலச் சுறா



கிண்ணியாவில் நேற்று முன்தினம் மீனவர்களின் வலையில் சிக்கிய சுமார் ஐயாயிரம் கிலோ கிராம் எடை மதிக்கத்தக்க திமிங்கலச் சுறா (Whale Shark) ஒன்று சிக்கியுள்ளது.

இதனை ☞9

## நாணய நிதியத்துடன் இணக்கம் வந்ததும் இலங்கைக்கு அமெ. முதலீடுகள் கிட்டும்!



### அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ரணிலுக்கு உறுதி

இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களை நடத்தி முடித்தவுடன், முதலீடுகளை மேம்படுத்தும் முயற்சிகளில் இலங்கைக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் என அமெரிக்க இராஜாங்க அமைச்சர் அன்டனி ஜே.பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை ☞9

## மென்மதுபான விற்பனைக்கான உரிமங்கள் தாராளமாகின்றன

பதிவு செய்யப்பட்ட அனைத்து சுற்றுலா நிறுவனங்களுக்கும் மென் மதுபான விற்பனைக்கான உரிமங்கள் வழங்குவதற்கான பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாக அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் கணக்கில் பதிவு ஒன்றை பதிவிட்டு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது சுற்றுலாவை மேம்படுத்தவும், நாட்டிற்கும், அனைத்து சுற்றுலாப் பங்குதாரர்களுக்கும் வெளிநாட்டு வருவாயைக் கொண்டு வரவும் உதவும் ☞9

## அமெ. - சீனத் தூதர்கள் கொழும்பில் சந்திப்பு!



அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் மற்றும் சீனத் தூதுவர் கியு ஷென்கின் ஆகியோருக்கு இடையில் சந்திப் பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்தில் இந்தச் சந்திப்பு ☞9

## நேற்றும் அமைச்சரவையில் ‘21’ குறித்து முடிவில்லை

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பான வரைவு நேற்றும் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட போதிலும் அது குறித்துத் தீர்மானிப்பது மீண்டும் ☞9

## இந்திய உதவி, நிவாரணமும் தீர்ந்தது இனி என்ன செய்யப் போகிறது அரசு?

### ஆட்சியாளரின் போக்குக் குறித்து சுரேஷ் பெருவிசனம்



யாழ்ப்பாணம், ஜூன் 14

இந்திய அரசின் கடனுதவிகள், நிவாரணங்கள் மூலமான விநியோகங்களும் வேகமாகக் கரைந்து விட்டன. இதன் பின்னரான காலப்பகுதியில் ஏற்படப் போகின்ற தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இது வரை எத்தகைய திட்டமும் தீட்டப் பட்டுள்ளதாகத் தெரியவில்லை என்று குறிப்பிட்டு பெருவிசனம் தெரிவித்திருக்கின்றார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிறேமச்சந்திரன். ☞03

## ஐ.நாவின் சாட்சியங்கள் திரட்டும் பொறிமுறையை மீண்டும் ஜெனிவாவில் நிராகரித்தார் ஜி.எல்.பீரிஸ்!




ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46/1 தீர்மானத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிப்புற சாட்சியங்கள் சேகரிப்புப் பொறிமுறையைநிராகரிக்கும்நிலைப்பாட்டில் இலங்கை தொடர்ந்தும் உள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நேற்று நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 50 ஆவது அமர்வில் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் விடே உரை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

அவர் தனது உரையிலேயே மேற்படி விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை விவகாரம் அடுத்த செப்ரெம்பரில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 51ஆவது கூட்டத் தொடரில் ஆரயப்பட விருக்கையில் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல் பீரிஸின் நேற்றைய உரை முக்கிய விடயமா கப் பார்க்கப்படுகின்றது.

அந்த உரையில் அவர் கூறியவை வருமாறு:-

எமது முன்னேற்றம் மற்றும் சவால்களை திறந்த பரிமாற்றத்தில் இலங்கை தொடர்ந்தும் இந்த சபை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் ☞03

## இனி இது…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி…)

வேண்டியிருக்கும்.

ஜனாதிபதித் தேர்தலோ, பொதுத் தேர்தலோ, சர்வஜன வாக்கெடுப்போ அல்லது மாகாணசபைத் தேர்தலோ எதுவென்றாலும் அதுதான் நிலைமை. தேசிய மட்டத்தில்தான் அவை நடத்தப்பட வேண்டியிருக்கும்.

பொதுத் தேர்தலோ, ஜனாதிபதி தேர்தலோ என்றால் அவற்றை இப்போது நடத்த முடியாது, அதற்கு நிதி இல்லை, சூழ்நிலையும் சரியில்லை என்கிறார்கள் ஆளும் தரப்பினர்.

ஆனால், ஆண்டு இறுதிக்கு முன்னர் உள்ளூராட்சி தேர்தல் எப்படியும் நடைபெறப் போகிறது. அதை அரசாலோ, அதிகாரத் தரப்பாலோ தடுத்து நிறுத்த முடியாது என்பதுதான் சட்டரீதியான நிலைமை.

தற்போதைய உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் கடந்த பெப்ரவரி முதல் அடுத்த பெப்ரவரி வரை ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டு இருக்கின்றது என்பது வாஸ்தவம்தான். ஆனால் நாட்டில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் அதிகாரம் வரும் அக்டோபரில் சட்டரீதியாக தேர்தல் ஆணையத்திற்கு வந்துவிடும். அதற்குப் பின்பு எப்போதும் அத்தேர்தலை அறிவித்து நடத்தும் தற்றுணிவு அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கே உண்டு. அதில் பிறர் எவரும் – பிரதமர், ஜனாதிபதி போன்றோர் கூட – தலையிட முடியாது என்பதுதான் சட்ட நிலைமை.

இன்றைய சூழ்நிலையில் ஆண்டு இறுதிக்கு முன்னர் – டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பு – நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தும் கொள்கை ரீதியான முடிவில் – தீர்மானத்தில் – தேர்தல் ஆணையம் இருப்பதாகத் தெரிகின்றது.

தேசிய ரீதியில் ஒரு தேர்தலை – உள்ளூராட்சித் தேர்தலை – ஆண்டிறுதிக்கு முன்னர் தேர்தல் ஆணையம் நடத்தி முடிக்கும் சூழல் உள்ளது. அது பெரும்பாலும் நிச்சயம் நடக்கும். அதை யாரும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

தேசிய ரீதியில் அந்தத் தேர்தலை நடத்தி முடிக்கலாம் என்றால், ஏன் பொதுத் தேர்தலையோ ஜனாதிபதித் தேர்தலையோ நடத்தி முடிக்க முடியாது என்ற நியாயமான கேள்வியும் எழுகின்றது.

இதற்கிடையில் தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் பரிந்துரை வழங்குவதற்காக அமைச்சர் தினேஷ் குணவர்தனா தலைமையில் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது பரிந்துரையை இறுதி செய்வதற்காக வரும் 17 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்றத்தில் கூடுகின்றது. பழைய மாகாணசபைத் தேர்தல் முறைமையின் கீழ் அடுத்த ஒரு மாகாண சபைத் தேர்தலையாவது இனியும் தாமதிக்காது நடத்தி முடிக்க வேண்டும் என்ற பரிந்துரையை அது இறுதி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பரிந்துரையில் அடங்கியுள்ள அதே அம்சத்தை, நல்லாட்சி அரசின் கடைசிக் காலத்தில் தனிநபர் சட்டமூலமாக சுமந்திரன் எம்.பி. அந்த நாடாளுமன்றத்தில் முன் வைத்திருந்தார் என்பதும், அந்த நாடாளுமன்றக் கலைப்போடு அது காலாவதியாகிவிட்டது என்பதும் குறிப்பிடத் தக்கவை.

சுமந்திரனின் அந்த ஆலோசனையை முன்னிறுத்தி, அதனையே தனது பரிந்துரையாக மேற்படி நாடாளுமன்றத் தெரிவுக்குழு வெள்ளியன்று இறுதி செய்ய அதிக வாய்ப்புகள் இருக்கின்றன என்று தெரிகின்றது.

அந்தப் பரிந்துரை செய்யப்படுவது கால தாமதமானால் முன்னர் நல்லாட்சி அரசில் இது தொடர்பாக தாம் சமர்ப்பித்த தனிநபர் சட்ட மூலத்தை மீண்டும் புதிதாக தனிநபர் சட்டம் மூலமாக – பிரேரணையாக – இந்த நாடாளுமன்றத்திலும் சுமந்திரன் விரைவில் சமர்ப்பிப்பார் என நம்பகரமாகத் தெரியவந்தது.

எந்தத் தேர்தல் என்றாலும் அதனை எதிர்கொள்வதற்கு இப்போது திராணி இல்லாத நிலையில் இருக்கும் மொட்டுக் கட்சியினர், உள்ளூராட்சித் தேர்தல்கள், மாகாணசபைத் தேர்தல்கள் போன்றவற்றை நடத்த இடமளிக்காமல் தமது கைவரிசையைக் காட்டுவார்கள் என்பது எதிர்பார்க்கப்படுவதே. பார்க்கலாம் நடப்பதை….

★ ★ ★

நாடாளுமன்றத்தில் சாணக்கியன் ஆற்றிய பேச்சைத் தவறாக அர்த்தம் பண்ணி, அவர் வன்முறையைத் தூண்டுபவர் என்பதுபோல ஒரு படத்தைக் காட்டி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றி இருக்கிறார். அது தொடர்பில் பிரதமருக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

நடந்த இந்த விடயங்களை அவதானித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன், பின்னர் வழங்கிய வழிகாட்டலின் அடிப்படையிலேயே இந்தக் கடிதத்தை இப்போது சாணக்கியன் எழுத்தில் பிரதமருக்கு அனுப்பியிருக்கிறார் எனத் தெரிகின்றது.

இவ்விடயத்தை ஒட்டி எதிர்காலத்தில் வரக்கூடிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கத் தக்க விதத்தில் சாணக்கியனின் கடிதம் வெளிப்படையாகவும், விளக்கமாகவும், நிலைமையை அப்பட்டமாக எல்லோருக்கும் தெளிவுபடுத்தும் விதத்திலும் அமைந்திருக்கின்றது. சம்பந்தன் – சுமந்திரனின் பார்வையின் பின்னர் இந்த கடிதம் ரணிலுக்கு அனுப்பப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது.

ரணில் தரப்பில் இருந்து பதில் ஏதும் வரும் என்று நம்புவதற்கு இடமில்லை.

– மின்னல் –

## பலாலிக்கு மீள…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி…)

பலாலி ஊடான சர்வதேச விமான சேவையை மீண்டும் ஆரம்பிப்பது மற்றும் தூத்துக்குடி காங்கேசன்துறை படகுச் சேவையைத் தொடங்குவது ஆகியவை தொடர்பான களநிலை ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கு துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேரடியாக விரைந்து பலாலிக்கும் காங்கேசன்துறைக்கும் செல்வார் எனவும் நேற்று அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சேவைகள் நடத்தப்படுவதால் மீண்டும் சுங்கத் திணைக்களம், குடிவரவு – குடியகல்வுத் திணைக்களம் போன்றவை காங்கேசனிலும் பலாலியிலும் இயங்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இவற்றை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேரில் அங்கு சென்று கவனித்து ஒழுங்கு படுத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

திருக்கேதீஸ்வரக் கும்பாபிஷேகத்துக்காகப் பக்தர்களுடன் திருச்சி, மதுரை, சென்னை விமான நிலையங்களில் இருந்து விமானங்கள் பலாலிக்கு வந்து திரும்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திருக்கேதீஸ்வரக் கும்பாபிஷேகத்துக்காக என்ற இலக்கை வைத்து இம்முயற்சி ஆரம்பிக்கப்பட்டாலும், அதன் பின்னர் வழமையான சேவைகள் விமானம், கப்பல் இரண்டு மார்க்கங்களிலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கான முன் முயற்சிகளை கொழும்பிலுள்ள இந்திய தூதவர் ஊடாக இந்திய வெளிவிவகார அமைச்சர் மட்டத்தில் கொழும்பிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு இருந்தார் எனவும் அறிய வந்தது.

திருக்கேதீஸ்வர கும்பாபிஷேகம் முடிவடைந்த பின்னரும் இந்த இரண்டு சேவைகளையும் – விமான சேவை மற்றும் கப்பல் (Ferry) சேவை இரண்டையும் – தொடர்ந்து வாராந்திர அடிப்படையில் முன்னெடுப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் எனவும் தெரிய வந்தது.

இந்த சேவைகள் ஒழுங்காக நடந்தால் அதன் ஊடாக மண்ணெண்ணை, டீசல் போன்ற எரிபொருள்களையும் உரம், பால்மா, மருந்துப் பொருள்கள் உட்பட்ட அத்தியாவசியப் பொருள்களையும் தேவையானளவு விரைந்து பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று மாலை 'காலைக்கதிருக்கு' தெரிவித்தார்.

மேலும், இதுதொடர்பான முயற்சிகளுக்கு பூரணமான ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் துறைசார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோருக்கு நாட்டு மக்கள் சார்பில் நன்றியைத் தாம் தெரிவித்துக் கொள்கிறார் எனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

மண்ணில் 07 . 01 . 1931



விண்ணில் 11 . 06 . 2022

### வடகோவை பூ க இராஜரட்ணம்

(ஓய்வுநிலை அதிபர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி)

யாழ்ப்பாணம் கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு, கொழும்பு வெள்ளவத்தை, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த வடகோவை பூ க இராஜரட்ணம் (ஓய்வுநிலை அதிபர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி) அவர்கள் 11.06.2022 சனிக்கிழமையன்று லண்டனில் சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற திருமதி சரோஜினிதேவி இராஜரட்ணம் அவர்களின் அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் கலாநிதி பிரேம்ராஜ் (அவுஸ்திரேலியா), சசிகலா (லண்டன்), உதயராஜ் (லண்டன்), மேகலா (லண்டன்) ஆகியோரின் அன்பு தந்தையும் நாராயணி, ஸ்ரீதரன், வனுஷியா, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பூதத்தம்பி, அன்னலட்சுமி, துரைசிங்கம் மற்றும் இராசமணி, காசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரனும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற பூமணி, இராசமணி, ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் லவிண்ராஜ், அஸ்வின்ராஜ், ஐசின்ராஜ், சரண்ராஜ், பிரவீன்ராஜ் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் டிலக்சன், பிவித்திகா, ஜக்சனா, மதுஜனா ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம். ஈமைக்கிரியைகளுக்கான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**முகவரி :**
6 Dudley Road .
Harrow.
HA2 0PR UK

**தகவல்**
பிரேம்ராஜ் (மகன்) - 0061 478 005 488,
சசிகலா (மகள்) - 0044 778 438 4796,
மேகலா (மகள்) - 0044 790 860 3770,
வனுஷியா (மருமகள்) - 0044 771 704 2485.



காலைக்கதிர் Kalaikkathir

## ஐ.நாவின் சாட்சியங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏனைய உறுப்புக்களுடன பகிர்ந்து கொண்டுள்ளது. இந்த வெளிப்படைத்தன்மை, நேர்மை மற்றும் திறந்த மனப்பான்மையிலேயே, தற்போதைய சபை அமர்வில் நான் இந்த உரையை ஆற்றுகிறேன்.

அண்மைய வாரங்களில் இலங்கை எதிர்கொள்ளும் பாரதூரமான சமூக மற்றும் பொருளாதார நிலைமையை சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளது. தொற்றுநோய் உள்ளிட்ட உலகளாவிய நெருக்கடிகளால் இந்த நிலைமை மோசமாகிவிட்டாலும், போராட்டங்களின் கவனம் பொருளாதார நிவாரணம் மற்றும் நிறுவன சீர்திருத்தத்திற்கான கோரிக்கைகளை உள்ளடக்கியது. இந்தச் சவால்களை அங்கீகரித்து, அனைவரையும் உள்ளடக்கிய முறையில் முன்னோக்கிச் செல்வதில், நமதுமக்களின்அனைத்துப்பிரிவுகளின், குறிப்பாக, இளைஞர்களின் அபிலாஷைகளுக்கு செவிசாய்ப்பது மிகவும் முக்கியமானதாக நாங்கள் கருதுகிறோம்.

எதிர்காலத்திற்கான நிலையான அடித்தளமாக, பரந்த அடிப்படையிலான அரசாங்கத்தின் ஊடாக தேசியப் பிரச்சினைகளுக்குஒருமித்தஅணுகுமுறையை ஜனாதிபதியும்பிரதமரும்கோரியுள்ளனர். புதிய பிரதமரின் நியமனம் மற்றும் பல கட்சிகளை உள்ளடக்கிய புதிய அமைச்சரவையின் நியமனம் ஆகியவற்றுடன் அரசியல் மாற்றங்கள் ஏற்கனவே இடம் பெற்று வருகின்றன.

அரசமைப்பின் 21வது திருத்தத்தின் தேவை, நாடாளுமன்றம், சுயாதீன நிறுவனங்கள் மற்றும் நிறைவேற்று அதிகாரங்களின் மீதான சரிபார்ப்பு மற்றும் சமநிலை ஆகியவற்றில் உள்ள அடிப்படை ஜனநாயக விழுமியங்களை ஒருங்கிணைப்பதற்காக, அனைத்து கட்சிகளின் ஒருமித்த கருத்தை உருவாக்குவதில் நாங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். இந்தச் சீர்திருத்தங்கள் ஜனநாயக அரசமைப்புக் கட்டமைப்பிற்குள் மற்றும் உரிய நடைமுறைக்கு ஏற்ப நடைபெறுவதை நாம் கூட்டாக உறுதி செய்ய வேண்டும். மாற்றத்தின் செயன்முறையானது, வலுப்படுத்த விரும்பப்படும் ஜனநாயக அமைப்புக்களை அழிக்கக்கூடாது.

கருத்து வேறுபாடுகள் அமைதியானதாகவும், ஜனநாயக வெளிக்குள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம். அண்மைய இடையூறுகளின் போது, சட்டம் மற்றும் பொது ஒழுங்கைப் பேணுதல் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை தடையின்றி விநியோகிக்க அனுமதிக்கும் ஒரே நோக்கத்திற்காக வரையறுக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு மற்றும் அவசரகால விதிமுறைகள் விதிக்கப்பட்டன. மே 9ஆந் திகதி நடைபெற்ற சம்பவங்கள் மற்றும் அதன் பின்விளைவுகள் தொடர்பாக முழு அளவிலான விசாரணைகள், சட்டமா அதிபரின் முன்மாதிரி மற்றும் நேரடியான நீதித்துறை மேற்பார்வையின் கீழ்நடைபெற்றுவருகின்றன. நாடளாவிய ரீதியில், நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட பலரின் மரணம் மற்றும் பெருமளவிலான சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமையையும் நாங்கள் தடையின்றி கண்டிக்கின்றோம். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இந்த சம்பவங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பொருளாதாரத்தின் முக்கிய அம்சத்தில், நிலைமையை உறுதிப்படுத்தவும், மக்களுக்கு அத்தியாவசியமானவற்றை வழங்கவும், சர்வதேச நாணய நிதிய ஆதரவுத் திட்டத்திற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படும் உறுதியான நடவடிக்கைகளை நாங்கள் உருவாக்குகின்றோம். முன்னோக்கிச் செல்வதில், உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்காளிகள் உட்பட அனைத்து பங்குதாரர்களுடனும் நாங்கள் உரையாடுகின்றோம். நமது பொருளாதாரத்தை மீண்டும் நிலையான அபிவிருத்திப் பாதையில் வைப்பதற்கும், உணவு, உரம், எரிசக்தி மற்றும் மருந்துகள் போன்ற தேவைகளை வழங்குவதற்கும் ஓர் ஒத்திசைவான கட்டமைப்பை நாங்கள் ஒன்றிணைத்து வருகின்றோம். தற்போதைய சூழ்நிலை மற்றும் எதிர்கால சீர்திருத்த நடவடிக்கைகள் ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தின் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே, இந்த விளைவுகளைத் தணிப்பதற்கான இலக்கு சார்ந்த சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு நாங்கள் உறுதியாக உள்ளோம். மனித உரிமைகள் பிரிக்க முடியாதவை, ஒன்றோடொன்று இணைக்கப்பட்டவை மற்றும் ஒன்றுக்கொன்று சார்ந்தவை என்பதை ஒரு முக்கிய நம்பிக்கையாக நாங்கள் அங்கீகரிக்கின்றோம்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் 49வது அமர்வு உட்பட, இலங்கை தொடர்பாக எழுப்பப்பட்ட தொடர்ச்சியான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் கடந்த ஆண்டுகளில் நாங்கள் சபையுடன் தொடர்பு கொண்டுள்ளோம். இன்று, நாம் ஒரு பரந்த சமூக சூழலில் குறைகள் மற்றும் சிக்கல்களைத் தீர்க்க முற்படுகையில், உள்நாட்டு செயன்முறைகள் மூலம் மோதலுக்குப் பிந்தைய ஒருங்கிணைப்பில்மேலும்உறுதியானமுன்னேற்றத்தை நிரூபிப்பது கட்டாயமானதும், சவாலானதுமாகும். இந்த சபையுடன் செயலில் ஈடுபடுவதன் மூலம் அதைத் தொடர்ந்தும் மேற்கொள்வோம்.

சமீபத்திய சவால்கள் மற்றும் தடைகள் இருந்தபோதிலும், சில முக்கிய துறைகளில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை நான் முன்னிலைப் படுத்த விரும்புகின்றேன்.

கடந்த கூட்டத்தின் பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தப்படும் என மனித உரிமைப் பேரவையில் நான் உறுதியளித்த பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்து, அது நிறைவேற்றப்பட்டது. இந்தத் திருத்தங்களின் ஒட்டுமொத்த விளைவு, தற்போதுள்ள சட்டத்தில் கணிசமான முன்னேற்றத்தையும், ஆழமான தாக்கத்தையும் ஏற்படுத்துவதோடு, இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் மனித சுதந்திரங்களுக்கான காரணத்தை மேலும் அதிகரிக்கும். இந்த நிலையில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களுக்கு நடைமுறையில் தடை விதிக்கப்படும் என பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை மேற்கொள்வதில் உரிய நடைமுறையைப் பின்பற்றுமாறும், மிகவும் அவசியமான சந்தர்ப்பங்களில் மட்டுமே பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துமாறும் சட்ட நடைமுறைப் படுத்தல் அதிகாரிகளுக்கு பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த சபையின் கடைசி அமர்வுக்குப் பின்னர், 2022 மார்ச் முதல் ஜூன் வரை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 22 பேர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் 13வது பிரிவின் கீழ் நிறுவப்பட்ட ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

2012ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் ஒழுங்குமுறை இல. 1 இன் கீழ் நியமிக்கப்பட்ட தனிநபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியல் மீளாய்வு செய்யப்படுகின்றது. தற்போது, 318 தனிநபர்கள் மற்றும் 04 நிறுவனங்களை பட்டியலில் இருந்து நீக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இது ஒரு தொடர் நடவடிக்கையாகும்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதில் அதன் ஆணையைத் தொடர்ந்தது.

நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக, நிலையான அபிவிருத்தி இலக்கு 16 உட்பட இலங்கை கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஐ.நா. வின் நிலையான அபிவிருத்தி அறிக்கை 2021 இலங்கையை 87வது இடத்தில் வைத்துள்ளதுடன், (இலங்கையின் உலகளாவிய தரவரிசை 165 நாடுகளில் 7 இடங்களால் அதிகரித்துள்ளது) நாட்டிற்கான ஒட்டுமொத்த தரவரிசை 68.1 ஆக வழங்கப்பட்டுள்ளது, இது பிராந் திய சராசரியை விட அதிகமாகும்.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம், அதன் சரிபார்ப்பு செயன்முறையின் ஒரு பகுதியாக, விசாரணைக் குழுவிற்கு அழைக்கப்பட்ட 83 வீதத்துக்கும் அதிகமான நபர்களைச் சந்தித்துள்ளது. இழப்பீடுகளுக்கான அலுவலகம், தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும், ஆண்டுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்காக, அதன் ஆரம்ப ஒதுக்கீடான ரூபா. 759 மில்லியனுக்கும் மேலதிகமாக, ரூபா. 53 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

மோதலின் முடிவில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட 92 வீதத்துக்கும் அதிகமான தனியார் நிலங்கள் முறையான உரிமையாளர்களுக்குவிடுவிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 8,090 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பாக, சட்டமா அதிபர் மேல் நீதிமன்றங்களுக்கு பல குற்றப்பத்திரிகைகளை அனுப்பியுள்ளமையோடு, அது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

புலம்பெயர் சமூகத்துடனும், எமது நாட்டின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் சிவில் சமூக அமைப்புக்களுடனும் ஈடுபடுவதற்கு இலங்கை திறந்த நிலையில் உள்ளது.

மனித உரிமைகள் ஆணையத்தின் 46/1 தீர்மானத்தின் மூலம் அறிமுகப் படுத்தப்பட்ட வெளிப்புற சாட்சியங்கள் சேகரிப்புப் பொறிமுறையை இலங்கை நிராகரிப்பதனை கடந்த காலத்தில் நான் தெளிவுபடுத்தினேன். இந்த பொறிமுறையானது துருவப்படுத்துவதற்கும் பிளவுபடுத்துவதற்கும் மட்டுமே உதவும் அதே வேளை, இந்த சபை மற்றும் அதன் உறுப்பினர்களின் வளங்களில் பயனற்ற மற்றும் உதவியற்ற வீண் நிலையை ஏற்படுத்தும் என்ற எமது நம்பிக்கையை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகின்றோம். - என்றார்.

---

## இந்திய உதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்விடயத்தை ஒட்டி அவர் ஊடக அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளார். அதிலேயே மேற்படி விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அவல நிலைக்கு எதிராக எழுச்சிபெற்றுள்ள மக்கள் போராட்டத்தை திசைதிருப்ப இனவாதத்தைக் கையிலெடுத்துள்ள அரசாங்கம் தனது முழுமையான அனுசரணையுடன் குருந்தூர்மலையில் நீதிமன்ற தடையையும் மீறி கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரையில் கடந்த 12.06.2022 அன்று புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்ய முயற்சித்துள்ளது. பிரதேச மக்களின் கடுமையான எதிர்ப்புக் காரணமாக அந்த முயற்சி தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டித்திருக்கின்றோம்.

2008 - 2009ஆம் ஆண்டுகளில் நடந்த யுத்த இறுதிகாலத்தின் பொழுது, இது மனிதாபிமானத்திற்கான ஒரு யுத்தம் என்று உலகத்திற்குக் காட்டுவதற்காக, இராணுவத்தினரின் ஒரு கையில் துப்பாக்கியும் மறுகையில் பாடசாலை சிறுமியின் படத்தையும் காட்சிப்படுத்தியிருந்தனர். இதன் மூலம் இலங்கை இராணுவம் என்பது சிறுவர்களின் கல்வி தொடக்கம் அனைத்து மனிதாபிமான நடவடிக்கைகளிலும் அக்கறை செலுத்துவதாக உலகத்திற்குக் காட்ட இலங்கை அரசாங்கம் முயற்சித்தது. ஆனால் அதே யுத்தத்தை நடத்திய ராஜபக்ஷ குடும்பத்தினரின் இன்றைய ஆட்சி அதிகாரத்தின் கீழ் குழந்தைகளுக்கான பாடசாலைப் புத்தகங்கள் இல்லை, அப்பியாசக் கொப்பிகள் இல்லை, பாடசாலை உபகரணங்கள் இல்லை என்ற நிலைக்கு முழு நாட்டையும் தள்ளியிருக்கிறது. அப்பொழுது யுத்தத்திற்கு ஆதரவு திரட்டுவதற்காக மனிதாபிமான முத்திரை குத்தினார்கள். இப்பொழுது ஒட்டுமொத்த நாட்டின் பாடசாலைச் சிறார்களும் தமது கல்விகற்கும் உரிமையை இழந்து தவிக்கின்றனர். இது தான் இலங்கை அரசாங்கத்தின் மனிதாபிமான வெளிப்பாடா? அல்லது நிர்வாகத் திறமையா? நாட்டின் இத்தகைய நிலைக்கு இன்றைய ஆட்சியாளர்கள் எத்தகைய விளக்கத்தைக் கொடுக்கப் போகின்றனர்?

யுத்தம் நடைபெற்ற காலத்தில் வடக்கு- கிழக்கில் அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடையை அன்றைய இலங்கையின் ஆட்சியாளர்கள் ஏற்படுத்தியிருந்தனர். தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஆயுதப்படைகளின் துணையுடன் அடக்கியொடுக்கினார்கள். தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப்பதிலாக பாரிய யுத்தத்தைக் கொண்டு நடாத்தினார்கள். இதனால் ஒட்டுமொத்த நாடும் அத்தியாவசியப் பொருள்கள், எரிபொருள்கள், உயிர்காக்கும் மருந்துகள் இன்றி தவிக்கின்றது.

இலங்கையின் நிலைமையை அவதானித்து வரும் ஐ.நா. 'இலங்கை பாரிய மனிதாபிமான பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளது' என்று தெரிவித்துள்ளது.

இவை ஒருபுறமிருக்க, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அடுத்த வாரத்திலிருந்து வெள்ளிக்கிழமையும் அரசாங்க ஊழியர்களுக்கு விடுமுறை நாளாகக் கணிக்கப்படும் என்று அறிவித்துள்ளார். அத்துடன் ஏற்கனவே அரச உத்தியோகத்தர்கள் விரும்பின், ஐந்து வருடம் சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடுகளுக்குச் சென்று உழைத்துக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. யுத்தம் நடந்தகாலத்தில் ஏறத்தாழ பதினைந்து இலட்சம்தமிழ்மக்கள்வெளிநாடுகளுக்கு விரட்டியடிக்கப்பட்டனர். இவர்களில் பல்லாயிரக்கணக்கான புத்திஜீவிகளும் துறைசார் வல்லுனர்களும் அடங்குவர். அதேபோன்று தமிழ்த் தேசிய இனத்தின் கோரிக்கை நியாயமானது என்று வாதாடிய சிங்கள ஜனநாயக முற்போக்கு வாதிகளும் நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இப்பொழுது முழுநாட்டையும் கொள்ளையடித்து குட்டிச்சுவராக்கி, நிர்வாகச் சீர்கேடுகளை உருவாக்கி, நாட்டில் எஞ்சியிருக்கின்ற நிர்வாகத் திறமையாளர்களையும் துறைசார் வல்லுனர்களையும்வெளியில்அனுப்பமுயற்சிக்கின்றீர்கள்.

கடந்த சில மாதங்களாக இந்தியா ஏறத்தாழ மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அரிசி, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், எரிவாயு, அத்தியாவசிய மருந்துப்பொருள்கள் மற்றும் பசளைபோன்றவற்றைவழங்கிவருகிறது. அந்த உதவிகள் அடுத்த சில நாள்களில் முடிவடையும் கட்டத்தை எட்டியுள்ளன. இதன் பின்னரான காலப்பகுதியில் ஏற்படப்போகின்ற தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இதுவரை எத்தகைய திட்டமும் தீட்டப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. அடுத்தடுத்த வாரங்களுக்கு எரிபொருள் கிடைக்குமா? எரிவாயு கிடைக்குமா? மின்சாரம் தடையின்றி கிடைக்குமா? அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தட்டுப்பாடின்றி கிடைக்குமா? உயிர்காக்கும் மருந்துகள் தடையின்றி கிடைக்குமா என்பது நிச்சயமற்ற நிலையில் அச்சமான சூழல்நிலையே நிலவுகின்றது. அரசாங்கத்தாலும் எதனையும் திட்டமிட முடியவில்லை. அரசாங்கத்தின் மோசமான நிர்வாக சீர்கேடுகளினால் பொது மக்களாலும் எதனையும் திட்டமிடமுடியவில்லை. இந்த இலட்சணத்தில் நீங்கள் தொடர்ந்தும் ஆட்சியதிகாரத்தில் இருப்பதற்குத் தகுதியானவர்கள்தானா என்பதை உங்கள் மனச்சாட்சியிடம் நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.

நாட்டின் இவ்வளவு சீர்கேடுகளுக்கு மத்தியில் நாட்டின் உண்மையான பிரச்சினைகளை அடையாளம் காணாமல், இன்னும் சிங்கள, தமிழ் கலவரங்களை உருவாக்கி, மக்களை திசைதிருப்பி, அவர்களை ஒருவருக்கொருவர் மோத விட்டு இனவாதத்தில் குளிர்காயத்தான் முயற்சி செய்கின்றீர்கள்.

ஒரு சிங்கள மகன்கூட இல்லாத குருந்தூர் மலையில், காலாகாலமாக சைவ மக்கள் சிவ வழிபாட்டை நடாத்தி வரக்கூடிய அந்த மலையில், நீதிமன்றத் தடைகளையும் துச்சமென மதித்து, பாரிய பௌத்த தாதுகோபுரத்தை எழுப்பியதன் நோக்கமென்ன? இது ஒரு தொல் பொருள் அமைவிடமாக

☞9

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முட்டாள்தனமான ஆட்சி!

**"இப்பொழுது நாட்டில் நிலவுகின்ற நெருக்கடிகளைத் தீர்த்து, அந்நிய முதலீடுகளை உள்வாங்கி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு கண்டறியப்படுவது முதற்படியாகும்" – என்று ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.**

**பௌத்த, சிங்களப் பேரினவாதத் தீவிர வெறிப்போக்கில் மூழ்கிக் கிடப்பதால், இந்த இலங்கைத் தீவில் தேசிய இனப்பிரச்சினையைப் புரையோடிப் போய்க் கிடக்கும் புற்றுநோயாக மாற்றி நிற்கும் தென்னிலங்கையின் சிற்றறிவிற்கு சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறும் இந்த உண்மை புரியப்போவதில்லை.**

**இனவாதம், மதவெறி, மேலாண்மைத் திமிர் போன்றவை தென்னிலங்கையின் மூளையத்தைப் பற்றிப் பீடித்து முடக்கி வைத்திருக்கின்றன. அதற்குத் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம் இப்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கும் ஒரே சமயத்தில் தீர்வு காணலாம் என்ற தந்திரோபாயம் – உத்தி – அந்தத் தென்னிலங்கைக்குப் புரியப் போவதில்லை என்பது திண்ணம்.**

**பொருளாதார நெருக்கடி நாட்டின் லட்சக் கணக்கான வாய்களினும், வயிறுகளினதும் வாழ்நிலைகத் தவிப்பாக, பசிக் கொடுமையின் கொதிப்பாக, வெளிப்பட்டு நிற்கின்றது. இந்தச் சமயத்தில் கூட, இனவாதத்துக்கு வெளியில் வந்து, நியாயத் தீர்வு காணும் புத்தி சாதுரியம் சிங்களத்துக்குக் கிடையாது என்பது தெளிவு.**

**இந்தச் சமயத்தின் சிங்கள மேற்கொள்ளும் இன்னொரு முட்டாள்தனத்தையும் – படுபிற்போக்குவாதச் செயற்பாட்டையும் – சுரேஷ் பிறேமச்சந்திரன் தமது அறிக்கையில் நாசூக்காகச் சுட்டிக்காட்டுகின்றார்.**

**அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத கையறு நிலையில் இருக்கும் அரசு, அவர்களை ஐந்து வருட சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு நெட்டித்தள்ளி அனுப்பி விட முயற்சிக்கின்றது.**

**தமிழர் தேசத்தின் மீது சிங்களம் தான் தொடுத்த இனவாத யுத்தத்தின் மூலம் பதினைந்து லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்களை நாட்டை விட்டு விரட்டியடித்தது. இவர்களில் பல்லாயிரக் கணக்கான புத்திஜீவிகளும் துறைசார் வல்லுநர்களும் இருந்தனர். அதேபோன்று தமிழ்த் தேசிய இனத்தின் கோரிக்கை நியாயமானது என்று வாதாடிய சிங்கள ஜனநாயக முற்போக்குவாதிகளும் நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்று சுரேஷ் பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டுகின்றார். அது முற்றிலும் உண்மை.**

**இதே சிங்கள ஆட்சியாளர்கள் இப்பொழுது முழு நாட்டையுமே கொள்ளையடித்துக் குட்டிச்சுவராக்கி, நிர்வாகச் சீடுகேடுகளை உருவாக்கி நாட்டில் எஞ்சியிருக்கின்ற நிர்வாகத் திறமையாளர்களையும் துறைசார் வல்லுநர்களையும் வெளியில் அனுப்ப முயற்சிக்கின்றார்கள் என்று அவர் சுட்டிக்காட்டுவது ஆழமும் அர்த்தமும் பொதிந்த நிஜ நிலைமை. நாட்டின் அவலம்.**

**முட்டாள்தனமான தலைமைகளின் கீழ் நடக்கும் முட்டாள்தனமான ஆட்சியில் அறிவற்ற இத்தகைய நடவடிக்கைகளே முன்னெக்கப்படும். அது இலங்கைத் தீவின் தலையெழுத்து.**

**விபரீதமான விளைவுகளைப் பற்றிப் புரிந்து கொள்ளாத ஆட்சியில் இது எல்லாம் சர்வசாதாரணம்.**

# எதிர்வரும் நாள்களில் மாற்றம் தேர்தலை எதிர்கொள்ள தயார்

## ஆளும் கட்சி அபரிமித நம்பிக்கை




ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய பதவிகள் எதிர்வரும் நாள்களில் மறுசீரமைக்கப்படும் என்றும் எந்த தேர்தல் இடம் பெற்றாலும் அதனை எதிர்கொள்ளத் தயார் என்றும் அதன் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்தமை தொடர்பாக வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாரிய எதிர்பார்ப்பிற்கு மத்தியில் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்கி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சியை நாட்டு மக்கள் ஏற்படுத்தினார்கள் எனக் கூறினார்.

ஆனால் கடந்த இரண்டு வருட காலமாக கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்த போதும் அரசாங்கத்தில் இருந்து கொண்டு பலவீனப்படுத்தும் வகையில் ஒருசிலர் செயற்பட்டமையால் அரசியல் நெருக்கடி தீவிரமடைந்தது என குற்றம் சாட்டினார்.

அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்காகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியதாகவும் இருப்பினும் அதற்கு முறையான தீர்வை அவர்கள் முன்வைக்கவில்லை என சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஒரு தனி நபரை இலக்காகக் கொண்டு மட்டுமே 21 ஆவது திருத்தச் சட்டமூலம் உருவாக்கப்பட்டது என்றும் இருப்பினும் இதற்கு எதிராகவே தமது கட்சி வாக்களிக்கும் என்றும் சாகர காரியவசம் குறிப்பிட்டார்.

# சர்வதேச நாணய நிதிய நிதி ஒக்ரோபர் வரை கிடைக்காது!

## ரஷ்யா, சீன உதவியை நாடுகிறார் பிரதமர்



சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து ஒக்ரோபர் மாதம் வரை இலங்கைக்கு கடன் கிடைக்க வாய்ப்பில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும் ஏனைய நட்பு நாடுகளிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு முயற்சிக்கிறேன் என தாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய நெருக்கடி தவறான நிர்வாகம், வரி குறைப்பு மற்றும் உரப்பிரச்சினை போன்றவற்றின் காரணமாக ஏற்பட்டது என பிரதமர் தெரிவித்தார்.

இருப்பினும் கொரோனாத் தொற்று மற்றும் ரஷ்யா – உக்ரேன் யுத்தம் காரணமாக இந்நிலைமை மிக மோசமடைந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க ரஷ்யாவிடம் இருந்து அதிக எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு தான் தீர்மானித்துள்ளேன் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை தற்போது பல நாடுகளின் உதவியை நாடியுள்ள நிலையில், சீனாவிடம் இருந்து மேலும் நிதி உதவிகளை ஏற்கத் தயாராக உள்ளேன் எனவும் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

உக்ரேன் நெருக்கடியின் தாக்கம் காரணமாக இந்த வருட இறுதிக்குள் உலகளவில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்தார்.

பொருளாதார மீட்சிக்குத் தேவையான திட்டங்கள் என்னவென்பதை அடையாளம் காண்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் பிரதமர் தெரிவித்தார்.

# உணவுப் பாதுகாப்பற்ற நிலைமைக்கு 22 வீதமானோர் உள்ளாகியுள்ளார்கள்!

## ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பிரதிப்பணிப்பாளர் வேதனை

பொருளாதார நெருக்கடியின் விளைவாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு அவசியமான உதவிகளை வழங்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபையால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டமானது பாரிய தேவைப்பாட்டுக்கு மத்தியில் வழங்கப்படுகின்ற மிகச்சிறிய உதவி மாத்திரமே என்று சுட்டிக்காட்டியிருக்கும் உலக உணவுத்திட்டத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பிரதிப்பணிப்பாளர் அன்தியா வெப், இலங்கையின் மொத்த சனத்தொகையில் 22 சதவீதமானோர் உணவுப் பாதுகாப்பற்ற நிலைக்கு முகங் கொடுத்திருக்கின்றனர் என தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

இலங்கைக்கு உதவும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபையால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் மனிதாபிமானத் தேவைகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாகக் கூட்டிணைந்த செயற்திட்டம் பாரிய தேவைப்பாட்டுக்கு மத்தியில் வழங்கப்படுகின்ற மிகச்சிறிய உதவியேயாகும்.

இந்தச் செயற்திட்டத்தின் ஊடாக வேறெந்தத் தெரிவுகளுமின்றி மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பிலேயே அவதானம் செலுத்துகின்றது.

இருப்பினும் அடுத்த சில மாதங்களில் அவசியமான உணவுப்பொருள்கள் கிடைக்கப்பெறாவிட்டால், மேலும் பலர் எமது உதவிகள் தேவைப்படும் நிலைக்குத் தள்ளப்படுவதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றது.

அதேவேளை ஒவ்வொரு நாளும் உலக சந்தையில் உணவு, எரிபொருள், உரம் ஆகியவற்றின் விலைகள் படிப்படியாக அதிகரித்துச்செல்வது தொடர்பாகவும் அவதானம் செலுத்தவேண்டியிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் இப்பொருளாதார நெருக்கடியின் காரணமாக இலங்கையின் மொத்த சனத்தொகையில் 22 சதவீதமானோர் உணவுப்பாதுகாப்பற்ற நிலைக்கு முகங்கொடுத்திருப்பதுடன், உதவிகள் தேவைப்படும் நிலையில் உள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.




# பாரதம் எங்கும் பரந்து கொடி கட்டிப் பறக்கும் நிதித் தொழில்நுட்பம்

நிதித் தொழில்நுட்பம் (சுருக்கமாக fintech அல்லது FinTech) என்பது நிதி சேவைகளை வழங்குவதில் பாரம்பரிய நிதி முறைகளுடன் போட்டியிடுவதை நோக்கமாகக் கொண்ட தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு ஆகும்.

முதலீடுகள், காப்பீடு, வர்த்தகம், வங்கிச் சேவைகள் மற்றும் இடர் மேலாண்மை ஆகியவற்றை தானியக்கமாக்குவதற்கு நிதி தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது

இந்திய நிதித் தொழில்நுட்பத்தின் ஸ்டார்ட் – அப்களின் வளர்ச்சி அதிவேகமாக உள்ளது. அதன் சந்தை 2025 ஆம் ஆண்டுக்குள் 15 ஆயிரம் கோடி டொலர் மதிப்பீட்டை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி புதன்கிழமை தெரிவித்தார்.

தொழில்துறை ‘சேம்பர் அசோசெம்’ ஏற்பாடு செய்த மாநாட்டில் பேசிய சவுத்ரி –

“இந்தியாவின் அபரிமிதமாக வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாக நிதி தொழில்நுட்பம் உருவெடுத்துள்ளது, நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள அனைத்துப் பங்குதாரர்களிடமிருந்தும் அதிகரித்து வரும் ஆர்வத்தை அது பெற்றுள்ளது” – என்றார்.

‘‘பெரும்பாலான இந்திய நிதித் தொழில்நுட்ப ஸ்டார்ட்அப்கள் ஒரு தசாப்தம் கூடப் பழமையானவை அல்ல, ஆனால் இந்த நிறுவனங்களால் காட்டப்படும் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி கடந்த சில ஆண்டுகளில் அதிவேகமாக உள்ளது. இந்திய நிதி தொழில்நுட்பச் சந்தை 2025 ஆம் ஆண்டளவில் 150 பில்லியன் டொலர் மதிப்பீட்டை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது – என அமைச்சர் மேலும் கூறினார்.

நிதித் தொழில்நுட்பத்தைத் தத்தெடுப்போர் விகிதம் உலக சராசரியாக 64 சதவீதமாக இருக்க இந்தியாவின் நிதி தொழில்நுட்பத் தத்தெடுப்பு 87 சதவீதமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.




UIDAI தலைமை நிர்வாக அதிகாரி சவுரப் கர்க் கூறுகையில் –

ஆதார் இயக்கப்பட்ட கட்டண முறையானது ஒரு கட்டடத்தில் தனியான கிளையை வைத்திருப்பதன் அவசியத்தை நீக்கி வங்கி முறைமையில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. நாடு முழுவதும் உள்ள 50 லட்சத்துக்கும் அதிகமான வங்கித் தொடர்பாளர்கள் இந்த அமைப்பைப் பயன்படுத்தி ‘பணத்துக்கு பணம் பட்டுவாடா’ வகையான பரிவர்த்தனைகளை மேற்கொண்டு வருகின்றனர் – என்றார்.

வாடிக்கையாளர்களை எளிதில் உள்வாங்கும் வசதியை இந்த ஆதார் முறைமை வழங்குகிறது என்றும் அவர் கூறினார்.

ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் முறைமை (Unified Payments Interface - UPI) மக்கள் தமது பரிவர்த்தனைகளை மேற்கொள்வதை எளிதாக்கியுள்ளது என்றும், தொழில்நுட்பம் வெற்றிகரமாக இருப்பதாகவும், அதனால் பல்வேறு கூட்டுத்தரப்புகள் இதைப் பயன்படுத்தப்படுவதால், ‘கூகுள் பே’ தயாரிப்பின் துணைத் தலைவர் அம்பரீஷ் கெங்கே கூறினார்.

“கூட்டாண்மை என்பது வெற்றிக்கு முற்றிலும் முக்கியமானது. நாங்கள் அதை ஒரு பூஜ்ஜிய தொகை விளையாட்டாக நினைக்கிறோம். உண்மையில், நிதித் தொழில்நுட்பம் அதற்கு பலியாகியுள்ளது. யார் யாருடன் போட்டியிடுகிறார்கள், யார் சாப்பிடப் போகிறார்கள், யாருடையதை, எந்த உணவை என்பவை பற்றிய ஊகங்கள் உள்ளன.




“ஆனால் உண்மையில் இந்தியத் தத்துவத்திற்குத் திரும்பினால், உலகமே எனது குடும்பம். அந்த நெருக்கத்தை நிதித் தொழில்நுட்பம் ஏற்படுத்தியுள்ளது. பலவிதமான சுற்றுச்சூழல் அமைப்பு வீரர்கள் ஒன்றிணைந்து ஒரே இலக்கை நோக்கிச் செயல்படுவதுதான் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் முறைமை போன்ற அமைப்புகளைப் பாதுகாப்பானதாக்குகிறது – என்று கெங்கே கூறினார்.

‘பேடிஎம்’ துணைத் தலைவர் தர்மேந்தர் ஜம்ப் கூறுகையில் –

“சமூகத்தில் ஸ்மார்ட்போன் ஊடுருவல் நிதித் தொழில்நுட்பத் தொழில் வேகமாக வளர்ந்து வருவதற்கு வழிவகுத்தது. அரசாங்கத்தின் டிஜிட்டல் மயமாக்கல் இலக்கு 2025 வரை 3,000 க்கும் மேற்பட்ட நகரங்களை எட்டும்.

“அவசரகாலத் தேவைகளின் போது உடனுக்குடன் பிணக்குகளைத் தீர்க்கக் கூடியதாக, உரிய தொழில்நுட்ப ஆலோசனையை வழங்கி இயங்கத் தக்க ஒரு முறையான இணைய பாதுகாப்பு அமைப்பின் தேவைப்பாடும் உண்டு.” – என்றார்.

# பலம்மிக்க நாடுகளுக்கு இரையாகவே இலங்கை உள்ளது மின்சார சபைத் தலைவரின் கருத்து இதற்கு தக்கச் சான்று!

## நளின் பண்டார சாட்டை



நல்லாட்சிக்கு முற்பட்ட ஆட்சி காலத்தில் மின்சக்தி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றியுள்ள தற்போதைய மின்சாரசபை தலைவர் எம்.சி.சி. பெர்னாண்டோ தெரிவித்துள்ள கருத்து பாரதூரமானதாகும். உலகில் பலம் மிக்க நாடுகளுக்கு இரையாகவே இலங்கை உள்ளது என்பதற்கு இதுவொரு தக்க சான்றாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

எம்.சி.சி. பெர்னாண்டோ 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் மின்சக்தி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றியுள்ளார்.

எனவே எம்.சி.சி.பெர்னாண்டோ என்பவர் விளையாட்டுப் பொருள் அல்லர். நுரைச்சோலை மின் உற்பத்தி நிலைய ஒப்பந்தம் கையெழுத்திடும் போதும் இவரே மின்சக்த அமைச்சின் செயலாளராகச் செயற்பட்டார்.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலைய ஒப்பந்தம் கையெழுத்திடும் போதும் 2 கோடியே 30 லட்சம் டொலர் மோசடி தொடர்பில் பிரபலமாகப் பேசப்பட்டது.

எனவே இவர் சிறு குழந்தை அல்லர். மன்னார் மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி , ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அழுத்தம் பிரயோகித்தார் என இவர் கோப் குழுவில் தெரிவித்தார்.

இவரால் தெரிவிக்கப்பட்டுள்ள இந்தக் கருத்து மிகவும் பாரதூரமானதாகும். இவரால் தெரிவிக்கப்பட்ட இந்தக் கருத்தால் இலங்கையில் மாத்திரமின்றி இந்திய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட சகலரும் கலவரமடைந்தனர்.

அதனையடுத்தே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ டுவிட்டர் பதிவொன்றை இட்டு இதனை நிராகரித்தார்.

எனினும் பின்னர் தனக்குக் காணப்பட்ட பதற்ற நிலைமையால் இவ்வாறு தெரிவித்தேன் எனக் கூறி, தான் தெரிவித்த கருத்தினை வாபஸ் பெற்றுள்ளார்.

இந்த வசனம் தவறுதலாக வெளிவந்ததல்ல. இவரால் இவ்வாறானதொரு கருத்து வெளிப்படுத்தப்படுவதற்கு முன்னைய தினத்தில் நாடாளுமன்றத்தில் மின்சாரசட்ட திருத்தம் சமர்ப்பிக்கப்பட்ட போது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கக் காரணம் இந்த காரணிகளாலேயே ஆகும்.

மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியை மேம்படுத்துவதற்கு நாம் எதிரானவர்கள் அல்லர். எனினும் இதனைக் காண்பித்து மின் உற்பத்திக் கட்டமைப்பைத் தமது சகாக்களுக்கு வழங்குவதற்கும், சர்வதேசத்துக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளையே நாம் எதிர்க்கின்றோம். உலக பலவந்த நாடுகளின் இரையாகியுள்ளது என்று கூறுவதற்கு புதிய சாட்சிகள் தேவையில்லை. – என்றார்.

# சுயாதீன கட்சிகளின் கூட்டணி இந்த வாரம் ஸ்தாபிக்கப்படும்!

## வீரசுமன வீரசிங்க தெரிவிப்பு



நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் 10 அரசியல் கட்சிகளை ஒன்றிணைந்த பரந்துப்பட்ட கூட்டணி இவ்வாரம் ஸ்தாபிக்கப்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடி பற்றி குறிப்பிடுகிறாரே தவிர நடைமுறைக்கு சாத்தியமான தீர்வை முன்வைக்கவில்லை என கம்யூனிஸக் கட்சியின் பதில் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

கூட்டணி தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிற்கு இனியொரு போதும் மக்கள் ஆதரவு வழங்கப்போவதில்லை.

பல்வேறு எதிர்பார்ப்பிற்கு மத்தியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் மக்கள் பெரும்பான்மை பலமிக்க அரசாங்கத்தை ஸ்தாபித்தார்கள்.

அரசாங்கம் தனது தவறை திருத்திக்கொள்ளாமல் தன்னிச்சையான முறையில் செயற்பட்ட காரணத்தால் அரசாங்கத்திலிருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படுகிறோம்.

எம்முடன் ஒன்றிணைந்துள்ள 10 அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து பரந்துப்பட்ட கூட்டணியை ஸ்தாபிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

கூட்டணியில் தலைமைத்துவ பதவிக்கு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார ஆகியோரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பரந்துப்பட்ட கூட்டணியை இவ்வார காலத்துக்குள் ஸ்தாபிக்கப்படும்.

பரந்துப்பட்ட கூட்டணி ஊடாக எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் தேர்தல்களில் போட்டியிட எதிர்பார்த்துள்ளோம்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு ஏற்பட்ட கதியே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிற்கு இனி ஏற்படும். நாட்டு மக்கள் ராஜபக்ஷர்களின் நிர்வாகத்தை முழுமையாக எதிர்க்கிறார்கள்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதற்காகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளோம்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைக்குத் தீர்வு காண நடைமுறைக்கு சாதகமான எவ்வித தீர்மானங்களையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. – என்றார்.

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தடுக்க அபிவிருத்திசார் உதவிகளை வழங்குவது அவசியம்

## ஐக்கிய நாடுகள் சபை தெரிவிப்பு

தற்போது இலங்கை முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக பெருமளவான மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதாக கவலை வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரின் கீழான மனிதாபிமான விவகாரங்கள் மற்றும் அவசர உதவி வழங்கல் தொடர்பான ஒருங்கிணைப்பாளர் மார்டின் க்ரிபித்ஸ், இருப்பினும் இந்த நெருக்கடி தீவிரமடைவதைத் தடுப்பதற்கு அபிவிருத்திசார் உதவிகளை வழங்குவது அவசியம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் மார்ட்டின் க்ரிபித்ஸ் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக பல மில்லியன் மக்களின் வாழ்க்கையும், வாழ்வாதாரமும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் வெகுவாகப் பாதிக்கப்பட்ட 17 லட்சம் மக்களுக்கு அவசியமான அத்தியாவசிய உதவிகளை வழங்குவதற்கு 4 கோடியே 70 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்குமாறு நாம் கோரியிருக்கின்றோம்.

எனினும் இது மேலும் பாரிய நெருக்கடியாக மாறுவதைத் தடுப்பதற்கு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குவது இன்றியமையாததாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்

# சிறார்களின் மந்தபோசனை தொடர்பில் அரசு அவதானம் செலுத்துதல் வேண்டும்!

## இம்தியாஸ் பாகீர் மாக்கார் வலியுறுத்து



இலங்கையில் சுமார் 50 ஆயிரத்துக்கும் அதிகமான 5 வயதிலும் குறைந்த சிறுவர்கள் மந்த போசணையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தி, அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகீர் மாக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஐக்கிய நாடுகள் சபை தொடர்பில் இலங்கையின் பட்டினி மற்றும் சிறுவர்களின் மந்த போசணை தொடர்பில் தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

நாட்டு மக்கள் இன்று கண்ணீருடனும் நம்பிக்கையின்றியும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சுமார் 50 ஆயிரத்துக்கும் அதிகமான 5 வயதிலும் குறைந்த சிறுவர்கள் மந்த போசணையால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவதானம் செலுத்தி அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

மீளக்கட்டியெழுப்ப முடியாத நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. ஆனால் இந்த நிலைமையை எதிர்கொள்வதற்கான எந்தவொரு தீர்வும் அரசாங்கத்திடம் இல்லை. ஜப்பான் எம்முடன் நட் புறவில் இல்லை.

இதற்கான காரணம் தவறான தீர்மானங்களே ஆகும். நாட்டில் பின்பற்றப்படும் அரசியல் கலாசாரம் மாற்றப்பட வேண்டும். காரணம் உள்ளக ஜனநாயகம் அற்ற கட்சிகளே தற்போது காணப்படுகின்றன. தேர்தல்களின் போது மக்கள் சரியான தெரிவுகளில் அவதானம் செலுத்த வேண்டும். – என்றார்.

# ஜனாதிபதிக்கும் எமக்கும் இடையில் இணக்கப்பாடு என்ற பிரதமரின் கருத்தில் எந்த உண்மையுமில்லை!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் காட்டம்

பிரதமர் கூறுவதைப்போன்று ஜனாதிபதிக்கும், சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் இடையில் எந்தவொரு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படவில்லை.

அரசமைப்பிற்கான 19 ஆவது திருத்தத்தை மீளக் கொண்டுவருவதற்கும், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கும் உடன்பட்டால் ஜனாதிபதி தொடர்ந்தும் பதவி வகிக்கலாமென நாம் எந்தவொரு உத்தரவாதத்தையும் வழங்கவில்லை என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தை மேற்கோள் காட்டி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் ஆற்றப்பட்ட உரை தொடர்பில் விளக்கமளித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அந்தச் சங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 8 ஆம் திகதி இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பெயரைக் குறிப்பிட்டு நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின் சில பகுதிகள் எமது சங்க நிறைவேற்றுக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

'இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடந்த மே மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்தித்து உடன்பாட்டுக்கு வந்தது. அரசமைப்பிற்கான 19 ஆவது திருத்தத்தை மீளக்கொண்டுவருவதுடன், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தால் உங்களால் ஜனாதிபதியாகத் தொடரமுடியும் என்பதே அந்த உடன்பாடாகும். அவர்களது முன்மொழிவுகளில் வேறெதுவும் இல்லை' – என்று பிரதமர் அந்த உரையில் கூறியிருந்தார்.

பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்காக ஏற்கனவே ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டிருந்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கடந்த மே மாதம் 8 ஆம் திகதியன்று சட்டத்தரணிகள் சங்கத்தின் முகாமைத்துவக்குழு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்பின்பேரில் ஜனாதிபதியின் இல்லத்தில் அவரைச் சந்தித்தது.

அதுமாத்திரமன்றி சட்டத்தரணிகள் சங்கம் அதன் முன்மொழிவுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சுயாதீனக்குழு, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றின் பிரதிநிதிகளை அவர்களின் அழைப்பின்பேரில் சந்தித்திருந்தது. ஒவ்வொரு சந்திப்பின் பின்னரும் அது தொடர்பாக ஊடக அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன.

சட்டத்தரணிகள் சங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளில் அரசமைப்பிற்கான 19 ஆவது திருத்தத்தையும், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதையும் மாத்திரம் உள்ளடக்கியிருக்கவில்லை.

மாறாக அது 15 அமைச்சரவை அமைச்சர்களைக் கொண்ட தேசிய ஒருமைப்பாட்டுக்கான அரசாங்கம், நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளினாலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய பிரதமரது நியமனம், அனைத்துக் கட்சியினராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய பொது இழிவளவாக்கல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும்15உறுப்பினர்களைஉள்ளடக்கியஆலோசனை சபை ஆகியவற்றையும் உள்ளடக்கியிருந்தது.

பிரதமர் கூறுகின்றமையைப் போன்று ஜனாதிபதிக்கும், சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் இடையில் எந்தவொரு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கமென்பது ஓர் உயர் தொழில்சார் அமைப்பு என்பதைக் கூறவேண்டிய தேவையேற்படாதவிடத்து, ஜனாதிபதிக்கும் சட்டத்தரணிகள் சங்கத்துக்கும் இடையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதா என்ற கேள்வி ஒருபோதும் எழாது.

அரசமைப்பிற்கான 19 ஆவது திருத்தத்தை மீளக் கொண்டுவருவதற்கும், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கும் உடன்பட்டால் ஜனாதிபதி தொடர்ந்தும் பதவி வகிக்கலாமென சட்டத்தரணிகள் சங்கம் எந்தவொரு உத்தரவாதத்தையும் வழங்கவில்லை.

நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீண்டும் நிலைநாட்டுவதற்கு அரசியல் உறுதிப்பாடு அத்தியாவசியமானது என்பதை சட்டத்தரணிகள் சங்கம் மீள வலியுறுத்தும் அதேவேளை, அதனை முன்னிறுத்திய முன்மொழிவுகளை இலங்கை வர்த்தக சம்மேளனம் உள்ளிட்ட பல கட்டமைப்புக்கள் ஏற்றுக்கொண்டுள்ளன. என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பஸிலை உடனடியாக சிறையில் அடைக்குக!

## அத்துரலியே ரத்ன தேரர் போர்க்கொடி



முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாட்டுக்கு இழைத்த குற்றத்துக்காக அவரை சிறையில் அடைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் கலந்துக்கொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில் –

பஸில் இன்று வீட்டுக்குப் போய்விட்டார், அவருக்கு இப்போது எந்தப் பொறுப்பும் இல்லை, குடும்ப அரசியலை நடத்தி வந்தவர் இன்று சொந்த ஊருக்குச் சென்றுவிட்டார், அதைப் பற்றி நாங்கள் பேசவில்லை.

இருப்பினும் அவர் தனது ஆட்சிக் காலத்தில் நாட்டுக்கு இழைத்த குற்றத்துக்காக சிறைக்கு செல்ல வேண்டும். அவரை உடனடியாக சிறையில் அடைக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# அரிசி தட்டுப்பாடு குறித்து போலியான பீதியை ஏற்படுத்தி விலையை அதிகரிப்பதற்கு சூழ்ச்சி!

## விவசாய பணிப்பாளர் நாயகம் தகவல்

அரிசி தட்டுப்பாடு என போலியான பீதியை ஏற்படுத்தி அரிசி விலையை அதிகரிக்க சூழ்ச்சி செய்யப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையில் நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சாத்தியமில்லை என விவசாய பணிப்பாளர் நாயகம் கலாநிதி அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த பெரும்போகம் மற்றும் சிறு போக நெல் உற்பத்தி எதிர்வரும் ஆறு மாத காலத்துக்குப் போதுமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை சிறு போகத்தில் 4 லட்சத்து 65 ஆயிரம் ஹெக்டேயரில் நெல் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே 90 வீதமான பயிரிடும் பணிகள் பூர்த்தியாகியுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரும்போகத்தின் 2022- 23 ஆம் ஆண்டுக்கான பெரும்போக விளைச்சல் மார்ச் மாத இறுதி வாரமளவில் கிடைக்கப் பெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஆண்டு முதல் இரண்டு மாதங்களில் நெல் இறக்குமதி செய்ய நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூடுதல் அளவில் நெல் மற்றும் அரிசியை களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தடுக்க அவற்றை சந்தைக்கு வெளிவிடுமாறு கலாநிதி அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

# இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் ஆயுர்வேத மருந்து மூலப்பொருள்களை இறக்குமதி செய்யுமாறு கோரிக்கை!

டொலர் நெருக்கடியின் காரணமாக இறக்குமதித் துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்பு ஆயுர்வேத மருந்து தயாரிப்பில் தாக்கம் செலுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அரச ஆயுர்வேத வைத்தியர் சங்கம், இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் ஆயுர்வேத மருந்து உற்பத்திக்கான மூலப்பொருள்களை இறக்குமதி செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரதமரால் நியமிக்கப்பட்டுள்ள சுகாதாரத்துறையில் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கான குழுவின் தலைவர் ருவான் விஜேவர்தனவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அந்தச் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

ஆயுர்வேத மருந்து உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்களை இறக்குமதி செய்வதற்கான நிதி நெருக்கடி நிலைமை காரணமாக 237 உலர் மருந்துகள் மற்றும் ஏனைய 136 வகையான மருந்துகளை உற்பத்தி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அரச ஆயுர்வேத வைத்தியர் சங்கம் இதன் போது சுட்டிக்காட்டியது.

டொலர் நெருக்கடி மற்றும் விநியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்தாமை உள்ளிட்ட காரணிகளாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாவும் அந்தச் சங்கம் தெரிவித்தது.

இதனால் நாடளாவிய ரீதியிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகங்களில் பாரிய மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறானமருந்துதட்டுப்பாடுகளைஎதிர்கொள்வதற்கு உள்நாட்டு மருந்து உற்பத்தியை மேம்படுத்த வேண்டும் என்று வைத்தியர்கள் இதன் போது வலியுறுத்தினர்.

சுற்றுலாப்பயணிகளை இலக்காகக் கொண்ட ஆயுர்வேத சிகிச்சை முறைமைகள் தொடர்பில் ஜேர்மன், ஆஸ்திரேலியா மற்றும் ரஷ்யா உள்ளிட்ட நாட்டு பிரஜைகள் ஆர்வம் செலுத்துகின்றனர். அதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்குமாறும் வைத்தியர்கள் கோரிக்கை விடுத்தனர்.

சுதேச ஆயுர்வேத மருத்துவத் துறையில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து தேசியக் கொள்கையை வகுக்கப் பிரதமர் அலுவலகத்தில் மத்திய குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் , சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு கொழும்பில் ஆயுர்வேத வைத்தியசாலைகளை நிறுவுமாறும் ஆயுர்வேத வைத்தியர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆயுர்வேத மருந்து உற்பத்திக்கான மூலப்பொருள்களை இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்து தர நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அரச வைத்தியசாலைகளிலும் ஆயுர்வேத மருந்துகளுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுவதாகவும், வருடத்தின் முதற்காலாண்டு நிறைவடைந்துள்ள போதிலும், இன்னும் அவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் இதன் போது தெரிவிக்கப்பட்டது.

இதனால் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றமையோடு, தேசிய மருந்து உற்பத்திக்கான மூலப்பொருள்களின் விலைகளும் நூற்றுக்கு நூறு சதவீதம் அதிகரித்துள்ளன எனவும் இதன் போது வெளிப்படுத்தப்பட்டது.

உலக சுகாதார ஸ்தாபனத்தில் உள்ளூர் மருந்தகத் துறை காணப்படுவதாகவும், இதன் மூலம் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் வைத்தியர்கள் சுட்டிக்காட்டினர்.

ஆயுர்வேத வைத்திய சங்கம் சுட்டிக்காட்டியுள்ள உண்மைகள் முழுமையான அறிக்கையாகத் தயாரிக்கப்பட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படும் என சுகாதார குழுவின் தலைவர் ருவன் விஜேவர்தன இதன் போது தெரிவித்தார். அத்தோடு சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுடன் கலந்துரையாடி சுற்றுலாப்பயணிகளை ஆயுர்வேத சிகிச்சை நோக்கி ஈர்ப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் ஆயுர்வேத மருந்து உற்பத்திக்கான மூலப்பொருள்களை பெற்றுக் கொள்வது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையுடன் இந்திய பிரதிநிதிகளுடன் பேச்சுகளை முன்னெடுப்பதாகவும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**



- செல்லத்துரை ரவீந்திரன் -

# தமிழ் மக்கள் எங்கு நிற்கிறார்கள்?

**அங்கம் -34**

ஏன், முள்ளிவாய்க்காலின் முடிவு நாள்களில் கூட தமிழ் மக்கள் இந்தியா



உதவிக்கு வராதா, உணவுப் பொட்டலங்களைத் தராதா என்று கையேந்தி நின்றனர். உணவுப் பொதிகள் எவையும் வரவில்லை.

விடுதலைப் புலிகள் மாத்திரமல்லர், அப்பகுதியில் இருந்த சர்வ மத அமைப்புகள், அரசு அலுவலர்கள், அரசு சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் உணவு திட்டமிட்டு குறைத்து அனுப்பப்பட்டு, மக்கள் பட்டினியால் சாக விடவோ, வெளியேறவோ நிர்பந்திக்கப் படுகிறார்கள், நிந்திக்கப்படுகின்றார்கள் என அறிவித்தார்கள்.

அரசாங்கம் அதை மறுத்துத் தங்களுடைய கணக்கெடுப்பின்படி அங்கு இருக்கக்கூடிய ஜனத்தொகைக்கு போதிய உணவு, மருந்து, குடிதண்ணீர் அனுப்பப் படுகிறன்றன, இவையெல்லாம் புலிகளின் அரசியல் பரப்புரை, அவர்களே பொருள்களைப் பதுக்கவும் செய்கிறார்கள்என்றுகூறிஅந்தக்குற்றச்சாட்டுகளை எல்லாம் நிராகரித்தது.

அதனை அன்றைய இந்தியாவின் வெளிவிவகார அமைச்சரும் சர்வதேசத்துக்கு ஸ்ரீலங்காவின் ஆதரவுக்காக ஒப்புவித்தார். இன்று அதன் உண்மைகள் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. சர்வதேச மனித உரிமைகள் மன்றின் ஆவணங்களிலும், அதன் கைவசம் இருக்கும் செய்மதிப் படங்களிலும் அந்த நிலைமைகள் துல்லியமாகப்பட்டுள்ளன.

ஆக, இந்தச் சந்தர்ப்பத்திலும் உணவும் உதவிகளும் அரசியலாகின.

ஆகவே உணவும் உதவிகளும் எந்த அரசியலுக்காக, எந்த ரூபத்தில் வரும் என்று சொல்லிக்கொண்டு வருவதில்லை. தேடி நிற்பவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதனை ஒட்டிய பதிவையும், புலம் பெயர் சமூகம் ஸ்ரீலங்காவின் கடனை மீட்டெடுக்கும் என்று குறிப்பிட்டதையும் ஒட்டி அறிமுகமான பலர் என்னுடன் அளவளாவினார். நான் கூட இவை அறிவிக்கப்பட்ட நாள்களில் பரிச்சய மானவர்களுடன் அதுபற்றிப் பேசி இருந்தேன். அனேகமானோர் தமிழ் மக்கள் தங்களது பண்பியல்பில் பெருந்தன்மையாக நடந்து உள்ளார்கள், மாற்றானுக்கும், இல்லை எதிரிக்கும் சேர்த்து, அவனது நிலையில் உதவி கேட்டமை இந்தியாவில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் கூட தமிழ் மக்களின் தராதரத்தை – மதிப்பை – எவ்வளவோ மடங்கு உயர்த்தி உள்ளது, ஆகவே, அவர்கள் எடுத்த முடிவுகள் சரியானதே என் றார்கள். நான் கூட அந்தப் பண்பியல் பின் பெருமையில் குளித்தேன்.

முள்ளிவாய்க்கால் அவலம் நடந்து, மக்கள் இன்றைய நிலை போல உணவுக்கு ஏங்கியபோது சிங்கள பொதுமக்களிடையே 'காலிமுகத்திடலில் இருந்து முள்ளிவாய்க்காலில் அகப்பட்டுள்ள மக்களுக்கு' என்று ஒரு யாத்திரை புறப்படவில்லை. எல்லோரும் விடுதலைப் புலிகள் அழிய வேண்டும், அதற்கு என்ன விலை கொடுத்தாலும் தகும் என்றே இருந்தார்கள். அப்படி நடந்த மக்களுக்குக் கைமாறாக, எல்லோருக்குமே உதவிகள் தர வேண்டும் எனக் கேட்டமை செய்நன்றியின் பிரதியுபகாரமல்ல, அதை மீறிய பண்பியல்பு, கர்மத்தில் விளைவுகளின் புரிதல், காந்தியம் என்றும் கூடக் கொள்ளலாம். பெருமைப்படலாம்.

ஆனால் அதற்காக இவற்றால் வரக் கூடிய அரசியல் ஆதரவுகளையும், அவை வருகின்ற காலங்களின் முக்கியத்துவங்களையும் அறிந்துகொள்ளாமல் – அரசியலின் ஆழம் இல்லாத அறிவுகளால், எடுத்த எடுப்பிலேயே வெள்ளை வேட்டி கட்டிக்கொண்டு யாசகம் செய்ய வெளிக்கிடக்கூடாது.

சிலர், பழையபடி இந்தியா எங்களைக் கட்டுப்பாட்டில் வைக்க முயலுகிறது, எங்களது, நாங்கள் கேட்ட உரிமைகளைப் பெற்றுத் தர வெளிப்படையான அரசியலைச் செய்து, தனது நேர்மைத் தனத்தை வெளிப்படுத்த வேண்டும், காலம் கடத்தும் இந்த உத்திகளில் விழுவதற்குத் தமிழ் மக்கள் தயாராக இல்லை என்று வாதிட்டார்கள். இது அவர்களின் வாதத்திற்கான வாதம். ஆனால் இந்தியாவின் அனுசணையுடன் அதன் அரசியலோடு இணைந்து எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள போகின்றோமா அல்லது எம் வழியில் போய் அடைந்துகொள்ள போகின்றோமா என்பதைத் தீர்மானைக்க வேண்டும் என்பது அவர்களிடையே இருக்கும் ஒரு சாரரின் நிலைப்பாடு. தமிழ்மக்கள்சரியானதலைமைக்காகத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.



இருப்பவர்கள் இடையே மேற்பட்ட கருத்தைப் பிரதிபலிப்பவர்களாக கஜேந்திரகுமாரும் அவர் தலைவராக இருக்கும் கட்சியினரும் இருக்கிறார்கள். எவை சாத்தியமோ அவற்றை ஒட்டி மற்றவர்களுடனும் சேர்ந்து, இணைந்து பணியாற்றாமல், தமிழ் மக்களுக்காக ஓரணியில் நிற்காமல், நடைமுறைச் சாத்தியமில்லாத இலட்சியங்க ளைத் தங்களுக்கு வேண்டிய அங்கீகாரங்களுக்காக முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவை பலன் தருமா என்பது தமிழ் மக் களுக்கும் தெரியும்.

ஆனால், அவர் இந்தியாவைச் சீண்டும் போதெல்லாம் பலர் கட்சி விசுவாசங்களுக்காக ஒப்புக்குக் குரல் கொடுக்கிறார்கள்.

அப்படிப் பார்க்கும்போது விடுதலைக்கு என்ற லட்சியத்தில்தான் பிரபாகரனும் மற்றவர்களும் பயணித்தனர். எவ்வளவு உயிர்த் தியாகங்கள், அர்ப்பணிப்புகள் செய்யப்பட்டாலும், எவ்வளவோ பண உதவிகள் நாட்டிலிருந்த மக்களாலும் புலம்பெயர் அமைப்புகளாலும் தரப்பட்டாலும் அவர்கள் விடுதலைப் பரணிகள் எழுதினார்களேயொழிய, தங்கள் காலத்திலேயே வெற்றியைச் சம்பாதித்துக் கொள்ளவில்லை. பல காரணங்கள் பேசப்படுகின்றன.

உலக அரசியல், பிராந்திய அரசியல், நாட்டு அரசியல், புவியியல் சூழ்நிலைகள், சுயநலங்கள் பற்றிய ஆழமான அறிவு மற்றும் தீர்க்கதரிசனம் அற்ற தீர்மானங்களுமே முக்கிய காரணங்களாகின்றன.

இன்று நாட்டுக்கு ஏற்பட்டுள்ள – முக்கியமாக சிங்கள மக்கள் எதிர்நோக்கியுள்ள – பஞ்சத்தையும் பொருளாதார நெருக்கடியையும் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக சந்திக்காதவர்கள் அல்லர். விடுதலைப் புலிகள் போராட்டத்தை முன்னின்று நடத்திக் கொண்டிருந்த காலகட்டங்களில் அவர்கள் சர்வதேச நியதிகளையும், புவியியல் சுழற்சியில் வல்லரசுகளின் சுயநலங்களையும் அறிந்து அனுசரித்து இயங்கினார்களோ இல்லையோ, தமிழ் இனத்தை முன்வைத்து ஒரு சுயநலமற்ற அர்ப்பணிப்புள்ளதலைமை அவர்களால் தரப்பட்டது. அதனால் அவர்கள் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டினார்கள்.

அந்த நெருக்கடிக் காலகட்டங்களிலும் அரசு அலு வலர் கள் சமூக கட்டமைப்புகள் அரசுசாரா குழுக்கள் மதவாரியான அமைப்புகள் என எல்லோரையும் இணைத்து, எதிர்கொண்ட நெருக்கடிக்கு தீர்வு கண்டார்கள்.

ஆனால் இன்றோ அப்படியான அக்கறை கொண்டு நிதர்சனத்தின் அடிப்படையில் செயல்ப டும் தலைமைத்துவம் இல்லை. எல்லாவற்றிலும் வாடுவது போல தமிழ் மக்கள் தலைமைத்துவத்திலும் வறுமையில் வாடுகிறார்கள். இருப்ப வர்களோ பழைய பரணிகளைப் பாடிக் கொண்டு இருக்கும் கதிரைகளை கெட்டியாகப் பிடித்துகொண்டு, அர்ப்பணிப்புடன் வருபவர்களை வெட்டி விடுகிறார்கள்.



இதனால் பல தளங்களில் இணைந்து செயல்படும் தலைமைத்துவம் கொண்ட கட்டமைப்புக்கள் உரு வாக்கப்பட வேண்டும் எனப் பலராலும் சுட்டிக்காட்டப் பட்டாலும், முடிவுகளுக்கு நாடாளுமன்ற பேச்சுக்களே செய்திகளாக உருவம் பெற்று நிற்கின்றன. அதனை ஒட்டிய விடயங்களை நாளை பார்ப்போம்.

(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

## இந்திய உதவி...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்தால் அது ஒரு தொல்பொருள் இடமாகப் பராமரிக்கப்பட வேண்டுமே தவிர, அதனை ஒரு பௌத்த இடமாக மாற்றுகின்ற உங்களது மேலாதிக்க சிந்தனை என்பது நாட்டை மேலும்மேலும் சீரழிக்கும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். பௌத்த மக்களே இல்லாத பிரதேசங்களில் இராணுவத்தைக் கொண்டு, நீதிமன்ற உத்தரவுகளைப் புறந்தள்ளி, பௌத்த சின்னங்களை உருவாக்குவதும்,பின்னர்அதனைப்பாதுகாப்பதற்காக இராணுவத்தை நிலைநிறுத்துவதும், அந்த இடங்களைச் சுற்றியுள்ள நிலங்களை ஆக்கிரமிப்பதும், தொடர்ச்சியாக சிங்கள – தமிழ் இனமுறுகலைப் பேணுவதையே அரசாங்கம் விரும்புவதைக் காட்டி நிற்கிறது.

ஒருபுறம் அரச ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாமல் அவர்களை வெளிநாடுகளுக்குச் செல்லும்படி கேட்கிறீர்கள். மறுபுறம் வாயைக்கட்டி வயிற்றைக்கட்டிமக்களைப்பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளுகின்றீர்கள். அதேசமயம் வடக்கு – கிழக்கில் பௌத்த விகாரைகளையும் சிங்கள குடியேற்றங்களையும் மேற்கொள்வதற்கு மிகவும் ஆக்கிரோமாக வேலைசெய்கிறீர்கள். இதற்கான பணத்தை எங்கிருந்து பெற்றுக்கொள்கின்றீர்கள்?

அரசாங்கம் இத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும் தனது இனவாத சிந்தனையிலிருந்து விடுபடுவதற்குத் தயாரில்லை என்பதையே இத்தகைய செயற்பாடுகள் வெளிக்காட்டுகின்றன. கொழும்பில் இருக்கின்ற ஐ.நா தூதுவர்களும் சர்வதேச நிதிநிறுவனங்களின் பிரதிநிதிகளும் சர்வதேச ராஜதந்திரிகளும் இலங்கை அரசாங்கத்தின் இத்தகைய மோசமான நடவடிக்கைகளைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றை முழுமையாக நிறுத்துவதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

முன்னைய மைத்திரி – ரணில் அரசாங்கத்தில் 19ஆவது திருத்தத்தினூடாக ஜனாதிபதியின் சில அதிகாரங்கள் நாடாளுமன்றத்திற்கு மாற்றப்பட்டது. பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்தவுடன், 20ஆவது திருத்தத்தினூடாக நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் பறிக்கப்பட்டு மீண்டும் பலம் மிக்க ஒரு ஜனாதிபதியாக தன்னை நிலைநிறுத்திக்கொண்டார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டு நாட்டை நாசமாக்கிய இரண்டரை வருடங்களின் பின், இப்பொழுது மீண்டும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரங்களை வழங்குவதற்கான 21ஆவது திருத்தம் பற்றி பேசுகிறார்கள். இவற்றையெல்லாம் தாம் விரும்பியவாறு விரும்பியவுடன் அரசாங்கத்தாலும் எதிர்க்கட்சியாலும் செய்ய முடியுமாக இருந்தால், ஒரு முறையான அதிகாரப் பகிர்வினூடாக, எழுபதாண்டுகால இன மோதலுக்கான நிரந்தரத் தீர்வை ஏன் காணமுடியாது? சர்வதேச ராஜதந்திரிகளும், ஐ.நா.வின் பிரதிநிதிகளும், சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இலங்கையின் பொருளாதாரத்தைத் துக்கிநிறுத்த வேண்டுமாக இருந்தால், இதனையும்கவனத்தில்எடுக்கவேண்டும் என்று கோருகின்றோம். இப்பொழுது நாட்டில் நிலவுகின்ற நெருக்கடியைத் தீர்த்து, அந்நிய முதலீடுகளை உள்வாங்கி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வு கண்டறியப்பட வேண்டியது முதற்படியாகும்.– என்று உள்ளது.

---

## மென்மதுபான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என அவர் தெரிவித்துள்ளார்.

இது இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு கிடைத்த மாபெரும் வெற்றி எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# என் மீதான உங்களின் பிழையான புரிதல் என் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும்

## ரணிலுக்குச் சாணக்கியன் கடிதம்



தனது நாடாளுமன்ற உரை தொடர்பான பிழையான புரிதல் காரணமாக தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கடந்த மே மாதம் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை மீளப்பெற வேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை குறிப்பிட்டிருந்தார்.

20ஆவது அரசியமைப்புத் திருத்தம் உட்பட நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தமை காரணமாகவே பலரின் வீடுகள் எரியூட்டப்பட்டதாக சாணக்கியன் வெளியிட்ட கருத்து ஏற்புடையதல்ல. இந்தக் கருத்தின் மூலம் சாணக்கியன் நடந்த வன்முறைகளை ஏற்றுக்கொள்கின்றாரா? மரணத்தை ஏற்றுக்கொள்கின்றாரா? எனவும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில், இது குறித்து தெளிவுபடுத்தும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில்,

கடந்த மே மாதம் 20ஆம் திகதி, எனது சமீபத்திய நாடாளுமன்ற உரை குறித்த ஒரு தெளிவுபடுத்துதலின் கட்டாயம் எனக்குள்ளது.

அதனடிப்படையில் நான் வன்முறையைத் தூண்டக்கூடிய எந்தவொரு நடவடிக்கைகளிலும் ஒருபோதும் ஈடுபடவும் இல்லை; ஆதரிக்கவும் இல்லை; ஊக்குவிக்கவும் இல்லை என்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

மூன்று தசாப்தங்களுக்கு மேல் பல விதமான பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ள ஓர் சமூகத்தை நான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற போதிலும், சமாதானம், நல்லிணக்கம் மற்றும் அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கியதாகஅனைத்து இலங்கையர்களின் தேவைகள் மற்றும் அபிலாகைகளுக்காக நான் குரல் கொடுத்து வருகின்றேன்.

நாம் பல சமூக பிளவுபடுவதைவிட ஒன்றாக இருப்பதில் இலங்கையர்களின் பன்முகத்தன்மையே எங்களின் பலமாக இருக்க வேண்டும் என்பதில் எனது கருத்துக்களில் நான் உறுதியாக இருக்கின்றேன்.

மே 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தங்கள்குறைகள், தேவைகள் மற்றும் அபிலாகைளை நிறைவேற்றத் தவறிவிட்டதாக உணர்ந்ததால்தான், மக்கள் வன்முறையான முறையில் எதிர்வினையாற்றினார்கள் என்று உரைத்திருந்தேன்.

தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்களுக்கு வாக்களித்த மக்களின் நலனைப் பாதுகாப்பதில் தங்கள் கட்டாயக் கடமைகளில் இருந்து தவறிவிட்டதாக அவர்கள் ஒருவேளை உணர்ந்திருக்கலாம். என்னுடைய இந்தக் கூற்று தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது.

எனவே, இதன் காரணமாகவே அவர்களுக்கு எனது நிலைப்பாட்டை விளக்குவது எனது தார்மீகக் கடமை என்று உணர்கின்றேன். அந்தவகையில், எனது அறிக்கைகளின் உண்மைத்தன்மையை பிரதமர் சரிபார்த்து, இது தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்.

உங்களுக்குத் தெரியும், இது போன்ற ஒரு மிகத் தீவிரமான அறிக்கை, அது நாட்டின் பிரதமரிடமிருந்தும், குறிப்பாக உங்களைப் போன்ற அந்தஸ்துள்ள ஒருவரிடமிருந்தும் வெளிப்படும்போது, பொதுமக்கள் அதை சந்தேகத்துக்கு இடமில்லாத உண்மை என்று கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ள முடியும். இது எனது நற்பெயருக்கு ஈடுசெய்ய முடியாத களங்கத்தை ஏற்படுத்தும் அதே வேளையில் எனது உயிருக்கும் அச்சுறுத்தலாக அமையும்.

இந்த நேரத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் முன்னுரிமையும் காலத்தின் தேவையும், இந்த நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதும், அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதும், மூன்று வேளை உணவையும் உறுதிப்படுத்துவதும், அவர்களை இந்தத் துயரத்திலிருந்து விடுவிப்பதும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நாட்டு மக்களுக்கு ஆறுதல் அளிக்கும், அவர்களுக்கு உடனடி மற்றும் நிலையான நிவாரணம் அளிக்கும், அவர்களின் தற்போதைய குறைகள் மற்றும் எதிர்கால நல்வாழ்வுக்காக எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் நான் என்றும் ஆதரிப்பேன் – என்றுள்ளது.

## யாழில் போதை ஊசி ஏற்றிய குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் போதை ஊசி ஏற்றினார் எனக் கருதப்படும் குடும்பஸ்தர் ஒருவர் வாழைத்தோட்டத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்., உரும்பிராய் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது 36 வயதுடைய இணுவில் வடக்கைச் சேர்ந்த துரைராசா உசாந்தன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உரும்பிராய் சிவன் வீதியில் உள்ள வாழைத்தோட்டம் ஒன்றில் 4 இளைஞர்கள் சேர்ந்து போதை ஊசி ஏற்றியுள்ளனர். இதன்போது அதிக போதை காரணமாக ஒருவர் சுய நினைவிழந்திருந்த சமயம் சுய நினைவை இழந்து நிலையில் ஒருவர் வீழ்ந்து கிடக்கின்றார் என்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற கோப்பாய் பொலிஸார் போதையில் இருந்தவரை பார்த்தபோது உயிரிழந்து காணப்பட்டுள்ளார். இதனால் உயிரிழந்தவருடன் இணைந்து போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

---

## அமெ.- சீனத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்றுள்ளதாக அமெரிக்க தூதுவர் தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்த சிநேகபூர்வமான சந்திப்பில் வர்த்தகம், முதலீடு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், இலங்கையின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

## நேற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்த வாரத்துக்குத் தள்ளி வைக்கப்பட்டதாக அறிய வந்தது.

நேற்றைய அமைச்சரவையிலும் இவ்விடயம் மேலோட்டமாக ஆராயப்பட்டது. நாளை புதன்கிழமை இதுதொடர்பான சில கருத்து பரிமாற்றங்கள் அரசு மட்டத்தில் இடம்பெற இருக்கின்றன என்றும், அதன் பின்னர் அடுத்த திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்விடயம் பரிசீலிக்கப்படும் என்றும் நேற்றைய அமைச்சரவை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாக அறிய வந்தது.

# அரச ஊடக நிறுவனங்களுக்கு புதிதாக தலைவர்கள் நியமனம்

அரச ஊடக நிறுவனங்களுக்கு புதிய தலைவர்கள் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று வெகுஜன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சில் வைத்து இந்த நியமனங்களை வழங்கினார்.

அதனடிப்படையில் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக அசங்க பிரியநாத் ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் தலைவராக பட்டய கணக்காளர் கனக அமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக ஹட்சன் சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

---

## நாணய நிதியத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்க இராஜாங்க செயலாளர் அந்தோனி பிளின்கனுடன் தொலைபேசியில் உரையாடினார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நடைபெற்று வரும் பேச்சுகளின் தற்போதைய நிலை குறித்து பிரதமர் விளக்கினார்.

அமெரிக்காவுடன் நெருக்கமாகச் செயற்படுவதற்கும் இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கும் இலங்கை எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சு வார்த்தைகள் முடிவடைந்த பின்னர் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கும் இலங்கையில் முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் அன்டனி ஜே.பிளிங்கன் ஒப்புக்கொண்டார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க இராஜாங்கச்செயலாளர் அந்தோனி பிளின்கனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

---

## தியத்தலாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதிவாகியுள்ளது.

பல இடங்களில் பலத்த மழையுடன் பனிக்கட்டிகள் தரையில் விழுவது கமராக்களில் பதிவாகியுள்ளது.

---

## கிண்ணியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீனவர்கள் கரைக்கு பெரும் சிரமத்திற்கு மத்தியில் கொண்டு சேர்த்தனர்.

# எதிர்க்கட்சியின் மீதான மக்களின் அதீத நம்பிக்கை சிதையும்போது நாடு அராஜக நிலைக்கு தள்ளப்படும்




பிரபலமான எதிர்க்கட்சி ஒன்று உருவாகுவதன் மூலமும், அந்த எதிர்க்கட்சி அடுத்த அரசாங்கமாகும் என்ற மக்களின் நம்பிக்கையின் மூலமே ஜனநாயகம் வலுப்படுத்தப்படும்.

மக்களின் இந்த நம்பிக்கை சிதைவடையும் போது நாடு அராஜகமாகும். எதிர்க்கட்சியின் செயற்பாடுகள் மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ப இடம்பெறுவதாகத் தெரியவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மேலும் 21 ஆவது அரசமைப்பு திருத்தத்தை இவ்வாரத்தி லேனும் அமைச்சரவையில் சமர்ப்பித்து அதனை எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறன்றி இதனை கால தாமதப்படுத்தும் ஒவ் வொரு சந்தர்ப்பங்களிலும் அரசியல் ஸ்திரமற்ற தன்மை உக்கி ரமடையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

21 ஆவது அரசமைப்பு தொடர்பில் தொழிற்சங்க பிரதிநிதி கள் உள்ளிட்டவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பொன்றின் பின் னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

21 ஆவது திருத்தம் நிச்சயம் நிறைவேற்றப்பட வேண்டும். ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையில் அதிகார சம நிலை அவசியமாகும்.

இவ்வாறு அதிகாரத்தை சமநிலைப்படுத்துவதற்காகவே நாம் இவ்வாறான கலந்துரையாடல்களில் ஈடுபடுகின்றோம்.

இவ்வாரமேனும் இதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து ஜூலை மாதத்துக்கு இடையில் அதனை நிறைவேற்றிக் கொள் ளுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

இதனைக் கால தாமதப்படுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பங்க ளிலும் அரசியல் ஸ்திரமற்ற தன்மை உக்கிரமடையும். இது பொருளாதார நெருக்கடிகளிலும், சர்வதேச விவகாரங்களிலும் தாக்கம் செலுத்தும். நபர்களை மாற்றுவதன் மூலம் எவ்வித மாற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது.

தம்மிக பெரேராவால் ஏதேனும் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என்பதை அவரது செயற்பாடுகள் ஊடாக அவதா னிக்க முடியும். எந்தவொரு நிறுவனமானாலும் மின்சக்தி திட் டங்களை வழங்குவது நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

எந்த அரசாங்கத்தில் அங்கத்துவம் வகித்தாலும் நாட்டுக்கு முக்கியத்துவமுடைய விடயங்களை சுயாதீனமாக பல சந் தர்ப்பங்களில் நான் வெளிப்படுத்தியிருக்கின்றேன். பலமான எதிர்க்கட்சியின் மூலமே நாட்டின் ஜனநாயகம் உறுதிப்படுத் தப்படும்.

ஜனநாயகம் வலுப்படுத்தப்படுவது பிரபலமான எதிர்க் கட்சி ஒன்று உருவாகுவதன் மூலமும், அந்த எதிர்க்கட்சி அடுத்த அரசாங்கமாக முடியும் என்ற மக்களின் நம்பிக்கையின் மூலமேயாகும்.

இந்த நம்பிக்கை சிதைவடையும் போது நாடு அராஜகமா கும். எதிர்க்கட்சியின் செயற்பாடுகள் அவ்வாறு அமைந்துள்ள தாகத் தெரியவில்லை.

எனவே தான் மக்கள் அரசாங்கமும் வேண்டாம், மக்களும் வேண்டாம் என்று கூறுகின்றனர். எதிர்காலத்தை மக்களே தீர்மானிக்க வேண்டும். புதிய தலைமுறையினருக்கு நாட்டை ஒப்படைக்க வேண்டும். – என்றார்.

# மனிதவள நெருக்கடி ஏற்படுவதைத் தடுக்க 3 முக்கிய துறைகள் தொடர்பில் அவதானம்!

## ஐ.நாவின் வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவிப்பு

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து இப்போது மிகமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டிருக்கின்றது. இவ்வாறானதொருபின்னணியில் இவ்வாண்டின் இறுதியில் இலங்கையில் பாரிய மனி தவள நெருக்கடி ஏற்படுவதைத் தடுப்பதற்காக உண வுப்பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய மூன்று முக்கிய துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி யிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக் கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி தெரி வித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையால் நிகழ்நிலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இலங்கையின் நிலைவரம் தொடர்பாகத் தெளிவுபடுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், அதனால் வெகு வாகப் பாதிக்கப்பட்டுள்ள 17 லட்சம் மக்களுக்கு அவசி யமான உதவிகளை வழங்குவதற்காக 4 கோடியே 72 லட்சம் டொலர் நிதியைக்கோரும் செயற்திட்டத்தை நாம் இலங்கையின் ஏனைய பங்காண்மைத்தரப்புக்களு டன் இணைந்து வெளியிட்டிருக்கின்றோம்.

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து இப்போது மிகமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டிருக்கின்றது. இது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதுடன் உணவுப்பாதுகாப்பு, அத் தியாவசியப்பொருள்களுக்கான கிடைப்பனவு, சுகாதார சேவை மற்றும் கல்விச்சேவையைப் பெற்றுக்கொள் ளல் உள்ளடங்கலாகப் பல்வேறு துறைகளிலும் மிக ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

இப்போது சுமார் 57 லட்சம் மக்கள் மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் நிலையில் இருக்கின்றனர் என எமது இலங்கைக்கிளை கட்டமைப்பு மதிப்பீடு செய் துள்ளது.

இந்நிலையில் மிகவும் அவசரமாகவும் அத்தியாவ சியமாகவும் உதவிகள் தேவைப்படுகின்ற பின்தங்கிய பிரிவினரை இனங்கண்டு, அவர்களுக்குரிய உதவி களை வழங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை இவ்வாண்டின் இறுதியில் இலங் கையில் பாரிய மனிதவள நெருக்கடி ஏற்படுவதைத் தடுப்பதற்காக உணவுப்பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய மூன்று முக்கிய துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தியிருக்கின்றோம். அதனை முன்னி றுத்தி உதவிச்செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

# மின்பிறப்பாக்கம் குறித்த திட்டத்தை மாற்றியமைக்காது வலுவான முறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்!

## கோப்குழு தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் ஆலோசனை

அரசியல் அதிகார மாற்றத்தின் அடிப்படையில் கொள்கைகள் மாற்றமடைந்தாலும் மின்பிறப்பாக்கம் தொடர்பான திட்டத்தை மாற்றியமைக்காது அதனை வலுவான முறையில் தொடர்ந்து முன்னெடுத்து செல்வது அவசியமாகும் என கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டினார்.

ஆட்சியில் இருந்த அரசாங்கங்களின் காலப்பகுதி யில் மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் கொள்வனவு செய் யப்பட்டிருந்த போதும் அவை இயங்காத நிலையில் காணப்பட்டமை தொடர்பாக விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என அதிகாரிகள் கோப் குழுவிடம் வலியுறுத்தினர்.

இந்த விடயம் தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் கணக்காய்வாளர் திணைக்களத்திடம் அறிக்கை யொன்றை சமர்ப்பிக்குமாறு கோப் குழுவின் தலைவர் இலங்கை மின்சார சபையிடம் பரிந்துரைத்தார்.

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 310 கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யப் பட்ட 50 மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் கொள்வனவு செய்யும் போதே செயலிழந்த நிலையில் காணப்பட் டமை தொடர்பில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) அவதானம் செலுத்தியுள்ளது.

இலங்கை மின்சார சபையின் 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத் தின் அறிக்கை மற்றும் அதன் தற்போதைய செய லாற்றுகை தொடர்பாக ஆராயும் நோக்கில் நாடாளு மன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமை யில் கடந்த 10ஆம் திகதி கோப்குழு கூடியது.

2018 மற்றும் 2019ஆம் ஆண்டு காலப்பகுதிகளின் போது அதிகாரிகளால் மின்பிறப்பாக்கி பரிசோதனை செய்திருப்பதாகவும், இந்தக் கொள்வனவிற்காக 310 கோடி ரூபா செலவு செய்யப்பட்டிருப்பதுடன், 50 மின்பிறப்பாக்கி இயந்திரங்களும் இன்று வரை இயங் கும் நிலையில் இருக்கின்றன எனவும் மின்சார சபை யில் உயர்மட்ட அதிகாரிகள் இதன்போது சுட்டிகாட்டினர்.

இந்த இயந்திரங்கள் ஆரம்ப காலத்தில் இயங்கும் நிலையில் இருக்கவில்லையென்றும், புனரமைக்கப் பட்ட பின்னரே இயங்கும் நிலைக்கு சென்றன எனவும் கோப் குழுவில் சுட்டிக்காட்டினர்.

எந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தாலும் அவை இயங்காத நிலையில் காணப்பட்டமை தொடர்பாக விரிவான விசா ரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என அதிகாரி கள் கோப்குழுவிடம் வலியுறுத்தினர்.

இந்த விடயம் தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் கணக்காய்வாளர் திணைக்களத்திடம் அறிக்கை யொன்றை சமர்ப்பிக்குமாறு கோப் குழுவின் தலைவர் பரிந்துரைத்தார்.

அத்துடன் எல்.டி.எல். நிறுவனம் தொடர்பில் இலங்கை மின்சார சபையிடம் உள்ள உரிமை, இந்த நிறுவனத்தைக் கணக்காய்வு செய்வது யார் என்பதை தீர்மானிக்கும் போது அரசாங்கக் கணக்காய்வை நீக் குவதற்கான அதிகாரம் இலங்கை மின்சார சபைக்கு உள்ளதா என கோப் குழுவின் தலைவர் மின்சார சபை யின் அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பினார்.

இந்நிறுவனத்தின் பங்குகளில் 63 சதவீதமான பங் குகள் இலங்கை மின்சார சபையிடம் இருக்கின்றன என இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கமைய அதிக பங்குகளை இலங்கை மின்சார சபைகொண்டிருந்தாலும்தொழில்நுட்பவிடயங்களைக் காரணங்காட்டி அரசாங்கக் கணக்காய்விலிருந்து அந்த நிறுவனம் நீக்கப்பட்டிருப்பதாக கோப் குழுவின் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

எனவே இந்தவிடயம்தொர்பில் இருவாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோப் குழுவின் தலைவர் ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் நீண்டகால மின்பிறப்பாக்கத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளது மையுடன், 2022 முதல் 2041 வரையான காலப்பகுதி களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள புதிய மின்பிறப்பாக்கத் திட்டம் தொடர்பான தகவல்கள் கணக்காய்வுத் திணைக்



களத்துக்கு கிடைக்கவில்லை என இதன்போது குறிப் பிடப்பட்டது.

2018 முதல் 2037ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான திட்டம் தொடர்பாகத் தகவல்கள் மாத்திரம் காணப்ப டுகின்றன என குறிப்பிடப்பட்டது.

இதற்கமைய அனுமதிவழங்கப்பட்டுள்ள நீண்டகால மின்பிறப்பாக்கத் திட்டம் குறித்த தகவல்களை விரை வில் கணக்காய்வு திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கு மாறு கோப் குழுவின் தலைவர் ஆலோசனை வழங் கினார்.

அரசியல் அதிகார மாற்றத்தின் அடிப்படையில் கொள்கைகள் மாற்றமடைந்தாலும் மின்பிறப்பாக்கம் தொடர்பான திட்டத்தை மாற்றியமைப்பது அவசியமா கும்.

இந்தியாவின் அதானி நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் அதற்கான சாத்தியக் கூற்று அறிக்கைகள் தொடர் பாகவும், அவசர மின்சாரக் கொள்வனவு, வாடிக்கை யாளர்களிடம் பெற்றுக்கொள்ளப்படும் வைப்புக்கான வட்டி தொடர்பான பல விடயங்களும் இதன்போது கலந் துரையாடப்பட்டுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.06.2022இல் வெளியிடப்பெற்றது


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=